T. 1102.

ஸ்ரீ:

ஸ்ரீ தந்வந்தரயே நம:

# நிகண்டுரத்நாகரம்.

(தந்வந்தரி நிகண்டை அனுசரித்தியற்றப்பட்டது.)

## முதற்பாகம்.

---

இஃது
திருவல்லிக்கேணி
ஹிந்து ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப் பண்டிதரும்,
"தினகரன்" பத்திரிகாசிரியருமாகிய
திரு. ராகவாசாரியர் அவர்களால்
செய்யுளாக வியற்றித்தரப்பெற்று;

"கவிராஜசேகரம்", "மதுவர்க்கம்" என்னும் புஸ்தகங்களின்
ஆசிரியரும், மதராஸ் ஆயுர்வேத காலேஜ் பண்டிதருமாகிய
வைத்திய பூபதி, S. கிருஷ்ணராவ்
அவர்களால்,

சென்னை புதுப்பேட்டை
தந்வந்தரி அச்சு யந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

1925.

ஆயுர்வேத வித்யாச்ரமம்; மைலாப்பூர்.

All Rights Reserved. Price Re. 1—4—0.

இதன் விலை ரூபாய். 1—4—0.

# FOREWORD.

I have been requested by M. R. Ry., Vaidya Bhupathi S. Krishna Rao Avl. to write an introduction to his poetical rendering of his Dhanvanthari Nighantu in Tamil. I have great pleasure in accepting this honour. Owing to my poor knowledge of Tamil, I know that I cannot do justice to the work that has been entrusted to me.

My only justification is that I can personally testify to the capacity of Pandit S. Krishna Rao as one of the teachers of our College. He has been in charge of Tamil Nighantu for over 2 years and his experience as such certainly places him in a position of great advantage with regard to the present compilation. His knowledge of both Sanscrit and Tamil are of a unique nature and I am sure that the great work that he has now undertaken will be of immense use to the coming generation.

Lack of State patronage during recent times has been a stumbling block to the growth of such poets who flourished in all parts of India at the Courts of the ruling Princes from time immemorial. The popular feeling now growing in this country in favour of the indigenous Sciences, has given a new impetus to the Indian talent and I hope that with the introduction of Mr. Krishna Rao's works a new era in the development of Indian Medicine will begin.

He has already published a few booklets in Tamil such as Maduvargam and Kavirajasekaram Parts I and II. I wish that he will be encouraged to continue his useful services by the response that they are sure to receive from the Public.

**A. Lakshmipati,** B.A., M.B. & C.M.
Principal,
Madras Ayurvedic College.

ஸ்ரீ:

# முகவுரை

பதார்த்தங்களின் பரியாயநாமங்கள், செயல்கள், சுத்திக் கிரமங்கள் ஆகிய இம்மூன்றின் ஞானம் வைத்தியர் யாவர்க்கும் இன்றியமையாததாகும். இவை மூன்றும் பண்டிதர்களுக்கு மூன்று கண்களாகக் கூறப்பட்டுள்ளன. இதனை "மருந்துசுத்தி குணநிகண்டு கண்கள் மூன்றும்" என்னும் வாக்கியத்தால் உணர்க.

இத்தகைய ஞானமில்லாத வைத்தியர்கள் செய்யும் சிகித்ஸைகள் யாவும் குருடர்களின் செயல்களை யொக்கும் என்பது யாவராலும் மறுத்தற்கியலாத வுண்மையாம்.

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்." (திருக்குறள்)

வைத்திய ஞானத்துக் குரிய அங்கங்களில் நிகண்டு மற்றவைகளைப்போல மிக அவசியமானதன்று எனச்சிலர் கூறுகின்றனர். மருந்து நூல்களில் ஒரே பொருளைப் பலவிடத்தில் பல பெயர்களால் வழங்கியுள்ள பெரியோர்களின் கருத்தையுள்ளவா றுணர்தற்கு நிகண்டின் ஞானமே முக்கியமானதால் அப்படிப்பட்ட அபிப்பிராயம் நியாயமானதன்று. மேலும் பற்பல தேசங்களில் அநேக காரணங்களை முன்னிட்டுப் பற்பல விதங்களாக வழங்கப்பட்டு வரும் பரியாய நாமங்கள், அவ்வப் பதார்த்தங்களின் அடையாளம், பேதம், சுவை, வீர்யம், விபாகம், குணம், பிரபாவம் முதலியவற்றையும், அவைகளுற் பத்தியாகும்பூமி, தேசம், காலம் முதலிய வற்றையும் உணர்த்துந் தன்மையையுடையன. ஆதலின் மருத்துவர் யாவர்க்கும் நிகண்டிஹுணர்ச்சி மிகவுமவச்யமானதாகவே யாகும். இதனை

புகற்கரு நிகண்டிலாப் புலவன் பொங்குசீர்த்
தகர்க்கரு மிலக்கணந் தங்கு *நாவலன்
உகக்கரும் படையிலா யுத்த வீரனும்
நகைக்கிட மாகுவர் நானி லந்தனில்.

என்னுஞ்செய்யுளானு முணரலாம்.

தமிழில் போகர் நிகண்டு, சட்டமுனி நிகண்டு, அகஸ்தியர் பஞ்சகாவிய நிகண்டு என்னும் பெயருள்ள பல

*நா + அலன் என்று பிரிக்க.

நிகண்டுகள் வெளிவந்துள்ளன. அந்நூல்களில், பற்பல இலக்கிய இலக்கணக் குற்றங்களும், பொருட் பிழைகளும் மைந்து கிடக்கின்றன. இம்மட்டோ! வடமொழிச்லோகங்களிலுள்ள ஸைஸேவோக்தா, ப்ரோக்தா, ஜ்ஞேயா, அபிச போன்ற பதங்களையும் பரியாய நாமங்களாக கூறப்பட்டிருக்கின்றன. மேலும் திருத்துதற்கியலாத வழுச்சொற்களமைந்த செய்யுட்களையுடையனவாகவும் காணப்படுகின்றன. இத்தகைய குற்றங்களமைந்த நூல்களைப் பெரியோர் செய்துள்ளாரெனக்கூறுவது நியாயமன்று. பிழைகள் மலிந்து கிடக்கும் இத்தன்மைய நூல்களைக் கொண்டு வைத்திய விஷயமான ஞானத்தைப் பெற முயல்வது பயனில்காரியமாம். ஆதலால் அதனை நீக்கி ஆயு ணூல் விஷயமான ஞானத்தை எளிதில் பலரும் உணர்ந்து கொள்ளுமாறு மேற்கூறிய நூல்களுக்கு ஆதாரமான முதனூல்களை யாராய்ந்து "நிகண்டு ரத்நாகர" மென்னும் இந்நூல் பெரும் பாலும் பிழைபற வியற்றப்பட்டுள்ளது. வடமொழியிலுள்ள தந்வந்தரி நிகண்டை அனுசரித்து இதனையும் எழுவர்க்கங்களாக வகுத்து அவற்றுள் முதல் மூன்றுவர்க்கங்களை முதல்பாகமாகச் செய்து பிரசுரித்திருக்கின்றேன். இந்நூல் இதனுடன் முடிவுபெருததால் இதில் அட்டவணை, அரும் பதவிளக்கம் முதலியவைகள் சேர்க்கப்படவில்லை.

எனது வேண்டுகோளுக் கிணங்கி இந்நூலைச் செய்யுள் ரூபமாக இயற்றித்தந்த "தினகரன்" பத்திராசிரியரும், ஹிந்து ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதரும் ஆகிய திரு. ராகவாசாரியர் அவர்களது செய்ந்நன்றி ஒருகாலும் மறக்கற்பாற்றன்று.

இதனை யச்சியற்றியுதவிய ஆந்திர வாயுர்வேத பார்மஸி மானேஜிங் டைரக்டராயும், சென்னை ஆயுர்வேத காலேஜ் அத்தியக்ஷகராயுமுள்ள டாக்டர். ஆ. லக்ஷ்மீபதி, பி.ஏ, எம்.பி. ஸி.எம். அவர்களுக்கும் நன்றிபாராட்டக்கடவேன்.

இங்ஙனம்,

வைத்தியபூபதி,

ஆயுர்வேத சித்தாச்ரமம், மைலாப்பூர்.

S. கிருஷ்ணராவ் பண்டிட்,
சென்னை ஆயுர்வேத காலேஜ்.

ஸ்ரீ தந்வந்தராயேநம:



கன்மந் தொலைதர முயலுங் கடவுளர்
கதமா ரவுணரும் நிதமேவி
முன்வந் தெதிர்தொழ முடிசே ரமடமலர்
முன்னோன் மின்னுறை மருமார்பன்
சன்மம் பெறுமுயிர் நரைநோய் மரணக்
தருபயம் நீங்க மருந்தாயும்
கன்னந் தரியிறை தளிரடி முடியுறு
தகையோ ருலகிற் புகழோரே.

ஸ்ரீ:
ஹரி: ஓம்

ஸ்ரீ தந்வந்தராயே நம:

காப்பு.

திருவளர் மறையுந் திகழுப வேதந்
தெரிதரு மங்கமும் புராணம்
மருவுவே தாந்த மந்த்ராதந் திரங்கள்
மறுவறு மிருதியின் கணமும்
பொருவறு காவ்ய நாடக முதலாப்
பொலிவுறு மொலிவடி வியாவும்
தெரிவரு மாயன் குணங்களைத் தெரிக்குந்
திறத்தவை தருக மங்களமே.

---

# நிகண்டு ரத்நாகரம்.

## முதல் வர்க்கம்.

### சீந்திலின் பெயர்.

புகழுறு மமுத வல்லி பொற்புறு குடூசி சின்னா
திகழ்சின்ன ருஹாவே தாரா தேர்ந்திடு சோம வல்லீ
நிகழ்கந்த ரோஹி ணீயே நீள்மது பர்ணி சௌம்யா
இகழ்வறு சந்த்ர ஹாஸா இரும்பித்தக் கினிவி சல்யா.

(இதன் பொருள்.) அம்ருதவல்லீ, குடூசீ, சின்னா, சின்ன-ருஹா, தாரா, ஸோமவல்லீ, கந்தரோஹிணீ, மதுபர்ணீ, ஸௌம்யா, சந்த்ரஹாஸா, பித்தக்நீ, விசல்யா; (1)

மன்னுசின் னேத்ப வாவே வருரஸா யனிவ யஸ்தா
உன்னுபிண் டாம்ரு தாவோ டுகப்புறு மிருத்தி காவே
துன்னுஜீ வந்தி நாக குமரிவா தரக்த ஹாரீ
பன்னுதந் திரிகா சக்ர லக்ஷணு பகுச்சின் னாவே.

(இ—ள்.) சிந்நோத்பவா, ரஸாயநீ, வயஸ்தா, பிண்டாம்ருதா, ம்ருத்திகா, ஜீவந்தீ, நாககுமாரீ, வாதரக்த ஹாரீ, தந்த்ரிகா, சக்ரலக்ஷணு, பஹுச்சிந்நா; (2)

வேறு

பேசுறுந் தேவ நிர்மிதை யோடு
பெருகுவற் சாதனி யமிர்தா
ஏசறு மமுத ஸம்பவை சுரநா
சினியொடு மெழிற்பிஷக் ஜிதையும்
தேசுகுண் டலியே மண்டலி தானுஞ்
செறிசுவை யமுதத்தின் லதையாம்
வீசுசின் னாங்கி யென்றிவை முதலா
விளங்கிடுஞ் சிந்திலின் பெயரே.

(இ—ள்.) தேவநிர்மிதா, வத்ஸாதநீ, அம்ருதா, அம்ருதஸம்பவா, ஜ்வரநாசிநீ, பிஷக்ஜிதா, குண்டலீ, மண்டலீ, அம்ருதலதா, சிந்நாங்கீ இவை சீந்திலின் பெயர்கள். (3)

வேறு

சீந்திற் கிழங்கின்பெயர்.

கன்னியா வமிர்த கந்தா கழறுநல் குடூசி காவே
மன்னுகந் தோத்ப வாவும் மருவுகந் தாவி னேடும்
சொன்னவிந் நாமம் சீந்திற் கிழங்கினைச் சொல்லு மென்றே
பன்னிய புலவர் யாரும் பகருவர் பாரின் மீதே.

(இ—ள்.) கந்யா, அம்ருதகந்தா, குடூசிகா, கந்தோத்பவா, கந்தா இவை சீந்திற்கிழங்கின் பெயர்கள். (4)

## அதிவிடயத்தின் பெயர்.

அதிவிஷா சுக்ல கந்தா வருவிச்வா பங்கு ராவே
துதிபெறும் ச்யாம கந்தா தூயகாச் மீரா வோடு
மதிதரு விஷதா பித்த வல்லபா உபவி ஷாவே
பதியுமா ருத்தி ராவே பகர்ப்ரதி விஷா சிருங்கி.

(இ—ள்.) அதிவிஷா, சுக்லகந்தா, விச்வா, பங்குரா, ச்யாமகந்தா, காச்மீரா, விஷதா, பித்தவல்லபா, உபவிஷா, ஆர்த்ரா, ப்ரதிவிஷா, ச்ருங்கி; (5)

கோதறு மருணா வோடு குணப்ரியா வதிஸா ரக்னீ
ஓதிய பால ரோக நாசினீ யுயர்வி ரூபா
மேதினி மதிக்கும் ச்வேதா விளங்குமிந் நாம மெல்லாம்
மீதுறும் புலவர் கூறு மிகுமதி விடயத் தின்பேர்.

(இ—ள்.) அருணா, குணப்ரியா, அதிஸாரக்னீ, பாலரோகநாசினீ, விரூபா, ச்வேதா இவை அதிவிடயத்தின் பெயர்கள். (6)

## பெருந் தரும்பையின் பெயர்.

மூருவா தேவ ஸ்ரேணீ முதுப்ருதக் பர்ணீ தேவி
சீருறு ஸ்நிக்த பர்ணீ திவ்விய லதாத்ரி பர்ணீ
பேருறு பீலுபர்ணீ பெருகுகோ கர்ணி தானும்
ஏருறு கோப வல்லீ யெழில்மது ரஸாவே யென்ப.

(இ—ள்.) மூர்வா, தேவஸ்ரேணீ, ப்ருதக்பர்ணீ, தேவீ, ஸ்நிக்தபர்ணீ, திவ்யலதா, த்ரிபர்ணீ, பீலுபர்ணீ, கோகர்ணீ, கோபவல்லீ, மதுரஸா; (7)

இகழ்விலாச் சுரங்கி காவே யெழில்தனுச் சாகா வோடு
நிகழ்வுறு ஜ்வலனீ ஸ்வாது ரஸாவொடு தேஜி னீதான்

திகழுமோ ரடாவே யென்னத் தெரித்தவிந் நாமம் யாவும்
புகழ்பெருங் குரும்பை யென்றே போற்றுவர் புலவ
ரெல்லாம்.

(இ—ள்.) ஸாரங்கிகா, தனுச்சாகா, ஜ்வலநீ, ஸ்வாது
ரஸா, தேஜிநீ, மோரடா இவை பெருங்குரும்பையின்
பெயர்கள். (8)

## பாற்பெருங்குரும்பையின் பெயர்.

கனமூலம் பீலு பத்ரம் புருஷந்தீர்க் கமூலா காட்டும்
வனமுறு கீர்ண புஷ்பம் வருக்ஷீர மோர டம்மே
வினவுதே ஜினியெ பீலு புஷ்பமோ ரடம்வி ளங்கு
நினைவுறு மதுஸ்ர வம்பாற் பெருங்குரும் பைப்பேர் நேரும்.

(இ—ள்.) கனமூல:, பீலுபத்ர:, புருஷ:, தீர்க்க
மூலா, கீர்ணபுஷ்ப:, க்ஷீரமோரட:, தேஜிநீ, பீலுபுஷ்ப:,
மோரட:, மதுஸ்ரவ: இவை பாற் பெருங்குரும்பையின்
பெயர்கள். (9)

## மஞ்சிஷ்டியின் பெயர்.

மஞ்சிஷ்டா கால மேஷீ மருவிய விகஸா காலா
தஞ்சமில் பாண்டீ பண்டீ தழுவிய ஸமங்கா ஜிங்கீ
எஞ்சில்க்ஷேத் த்ரிணியே ரக்தா வியம்பிடும் ரக்த யஷ்டீ
கஞ்சமார் கண்டா லீயுங் கருதிய வருணை வோடு.

(இ—ள்.) மஞ்சிஷ்டா, காலமேஷீ, விகஸா, காலா,
பாண்டீ, பண்டீ, ஸமங்கா, ஜிங்கீ, க்ஷேத்ரிணீ, ரக்தா,
ரக்தயஷ்டீ, கண்டாலீ, அருணை; (10)

காலமே ஷிகாரக் தாங்கீ கழறுமஞ் சுகாவி னோடு
சீலயோ ஜனவல் லீயுஞ் செறிவஸ்த்ர பூஷ ணையும்

மேவுறு விஜயா வின்ன விளங்கிடு நாமம் யாவும்
நூலறி புலவர் மேலா றுவலுமஞ் சிஷ்டி யின்பேர்.

(இ—ள்.) காலமேஷிகா, ரக்தாங்கி, மஞ்சுகா, யோஜந வல்லீ, வஸ்த்ரபூஷணா, விஜயா இவை மஞ்சிஷ்டியின் பெயர்கள். (11)

## காஞ்சோறியின் பேயர்.

மன்னுதன் வயாசத் தோடு மகிழ்துரா லம்பா யாசம்
உன்னிய தாம்ர மூலீ யொளிர்துரா லப்பு மிற்றைத்
தன்வய வாஸ கந்தான் றழுவுக்ச் சுராதுஸ் பர்சா
இன்னவை காஞ்சொ றிக்கே யியல்வுறு நாம மாமே.

(இ—ள்.) தந்வயாஸ:, துராலம்பா, யாஸ:, தாம்ரமூலீ, துராலபா, தந்வயவாஸக:, கச்சுரா, துஸ்பர்சா இவை காஞ்சொறியின் பெயர்கள். (12)

## பெருங்காஞ்சொறியின் பெயர்.

பேர்பெறு மனந்தம் பால பத்திரம் தூர மூலம்
சீர்பெறு தீர்க்க மூலம் திகழ்யவா ஸகமே யாசம்
பார்பெறு சமுத்தி ராந்தம் பகாதி கண்ட கந்தான்
ஏர்பெறு மருத்ப வத்கோ டியல்பெருங் காஞ்சொ றிப்பேர்.

(இ—ள்.) அநந்த:, பாலபத்ர:, தூரமூல:, தீர்க்கமூல:, யவாஸக:, யாஸ:, சமுத்ராந்த:, அதிகண்டக:, மருத்பவ: இவை பெருங்காஞ்சொறியின் பெயர்கள். (13)

## ஆடாதோடையின் பெயர்.

வாசகம் ஸிம்ஹ பர்ணீ வருஸிம்ஹ முகியே வாஸா
நாசமில் ஸிம்ஹி காவே நாடிய ஆட ரூஷம்

ஏசறும் விருஷத் தோடே யியலடை ரூஷகந் தான
பேசுறு பிஷங்மா தாவும் பேர்பெறு மாடா தோடை.

(இ—ள்.) வாஸக:, ஸிம்ஹபர்ணீ, ஸிம்ஹமுகீ, வாஸா, ஸிம்ஹிகா, ஆடரூஷ:, வ்ருஷ:, அடரூஷக:, பிஷங்மாதா இவை ஆடாதோடையின் பெயர்கள். (14)

## கருங்காலியின் பெயர்.

கதிரமே ரக்த ஸாரம் காயத்ரீ ஜிஹ்ம சல்யம்
துதிபெறு பால பத்ரம் சொல்தந்த தாவ னமமே
உதிதரு கண்ட கீயே யுயர்க்ஷத க்ஷமமே யென்ப
மதியுறு புலவர் கூறு மகிழ்கருங் காலி யின்பேர்.

(இ—ள்.) கதிர:, ரக்தஸார:, காயத்ரீ, ஜிஹ்மசல்ய:, பாலபத்ர:, தந்ததாவந:, கண்டகீ, க்ஷதக்ஷம: இவை கருங்காலியின் பெயர்கள். (15)

## வெண்காலியின் பெயர்.

கார்முகம் ச்வேத ஸாரம் கருதிய சோம வல்கம்
பேர்மிகு பதித்ரு மந்தான் பெருகுச்யா மஸார மோடு
பார்புகழ் நேமி வ்ருக்ஷம் பருகுப்ஜ கண்ட கந்தான்
ஏர்மிகு வெண்கா லிப்பே ரென்றனர் நூல்வல் லாரே

(இ—ள்.) கார்முக:, ச்வேதஸார:, ஸோமவல்க:, பதித்ரும:, ச்யாமஸார:, நேமிவ்ருக்ஷ:, குப்ஜகண்டக: இவை வெண்காலியின் பெயர்கள். (16)

## வேம்பின் பெயர்.

நிம்பமே நியம னந்தான் நிகழ்வுறு பிசுமந் தம்மே
பம்புறு ஸர்வதிக்த கம்பின் வளர்பாரி பத்ர கப்பேர்

நம்பிய ஸர்வ தோபத் ரத்தொடு ப்ரபத்ரா ரிஷ்டம்
உம்பரு மகிழ்ந்து போற்று முயர்வேம்பி னும மாமே.

(இ—ள்) நிம்ப:, நியமந:, பிசுமந்த:, ஸூதிக்தக:, பாரிபத்ரக:, ஸர்வதோபத்ர:, ப்ரபத்ரா, அரிஷ்ட:, இவை வேம்பின் பெயர்கள். (17)

வேறு.

**பெருவேம்பின் பெயர்.**

மேவருங் கேச முட்டிகா காண்ட
விஷமுஷ்டி கத்தொட க்ஷீரம்
ஓவரு நிம்ப ரகத்தெர்டுத் ரேகி
யுயர்மஹா நிம்பமுந் தானும்
தாவருங் கசப்பைத் தருமதோத் ரேகி
தளிருறு கார்முகப் பேரும்
பாவலர் கூறும் ரம்யகத் தோடு
பகர்பெரு வேம்பினின் பெயராம்.

(இ—ள்.) கேசமுஷ்டி, காகாண்ட:, விஷமுஷ்டிக:, அக்ஷீர:, நிபாரக:, உத்ரேகீ, மஹாநிம்ப:, மதோத்ரேகீ, கார்முக:, ரம்யக: இவை பெருவேம்பின் பெயர்கள். (18)

வேறு

**மலைவேம்பின் பெயர்,**

சுக்கில சாலத் தோடு சொல்கபாஹ்ற வயமே யென்னும்
மிக்குயர் ரமண மென்றும் விளங்குமா ரிஷ்ட மென்றும்
இக்கிரி நிம்பந் தன்னோ டிராமண மென்று மேலோர்
தக்கைட ர்ய மென்றும் சாற்றுவர் மலைவேம் பிற்கே.

(இ—ள்.) சுக்லசால:, கபாஹ்வய:, ரமண:, மஹாரிஷ்ட:, கிரிநிம்ப:, ராமண:, கைடர்ய: இவை மலைவேம்பின் பெயர்கள். (19)

### நிலவேம்பின் பெயர்

கிராதமே காண்டஸ் திக்தம் கிராததிக் தகம் பூநிம்பம்
விராவும்பார் வதமே ஹிங்கு நிர்யாசம் விரிக டர்யம்
பராவுச்சர்த் திக்னம் ஹைமம் பருவரத் துவச மாகும்
அராவிடம் நீக்கு நிம்பம் அருராம சேன கப்பேர்.

(இ—ள்.) கிராத:, காண்டஸ்திக்த:, கிராத திக்தக:, பூநிம்ப:, பார்வத:, ஹிங்குநிர்யாஸ:, கடர்ய:, சர்தநிக்ந:, ஹைம:, வரத்வச:, நிம்ப:, ராமஸேநக:; (20)

### சீமைநிலவேம்பின் பெயர்,

பெருகிய பிரிய சாலம் பிசுமந்த மரிஷ்டம் பேசும்
முருகுறு மநார்ய திக்தம் மொய்ம்புறு நிலவேம் பின்பேர்
மருவுநித் ராரி திக்தம் வருஸந்நி பாத ஹாவோ
டருசுராந் தகநே பால மஹைமஹா திக்தம் வேறே.

(இ—ள்.) பிரியசால:, பிசுமந்த:, அரிஷ்ட:, அநார்ய திக்த: இவை நிலவேம்பின் பெயர்கள். நித்ராரி:, திக்த:, ஸந்நிபாதஹா, ஜ்வராந்தக:, நேபால:, மஹாதிக்த: இவை சீமை நிலவேம்பின் பெயர்கள். (21)

### கடுகுரோஹிணியின் பெயர்.

படருறு கடுகா திக்தா பகர்மத்ஸ்ய சகலா வோடு
மிடாறு க்ருஷ்ண பேதா யியம்பிடுங் சக்க ராங்கி
புடைவளர் மத்ஸ்ய பித்தா புரிமஹௌ ஷதிஜ நாவே
அடைவுறு விப்பி ராங்கி யருங்கடு ரோஹி ணிப்பேர்.

(இ—ள்.) கடுகா, திக்தா, மத்ஸ்யசகலா, க்ருஷ்ண பேதா, சக்ராங்கி, மத்ஸ்யபித்தா, மஹௌஷதீ, ஜநா, விப்ராங்கி, கடுரோஹிணீ இவை கடுகுரோஹிணியின் பெயர்கள். (22)

### வேறு.

நிலைபெறும் வாந்தி தாவொடு மரிஷ்டா
நீள்சத பர்வையா மக்னி
தொல்வரு மசோக ரோஹிணி ஜநநீ
தொடர்மல பேதினி தானும்
நிலவுதிக் தகரோ ஹிணியொடு கடுக
ரோஹிணி நீள்பெய ரென்ப
பலர்புகழ் சகுலா தனியொடு காண்ட
ருஹாவிவை பன்னு வரதற்கே.

(இ—ள்.) வாந்திதா, அரிஷ்டா, சதபர்வா, ஆமக்நீ, அசோகரோஹிணீ, ஜநநீ, மலபேதிநீ, திக்தகரோஹிணீ, கடுகரோஹிணீ, சகுலாதநீ, காண்டருஹா இவை கடுகு ரோஹிணியின் பெயர்கள். (23)

### கோரைக்கிழங்கின் பெயர்.

மேகமே முஸ்தா வோடு மிகுமம்பு தாஞ்ஜீ மூதம்
ஆகிய பத்ர முஸ்த மறைராஜ கஸேரு வாகும்
ஏகுறு ஜலத மப்தம் எழில்வ்ருஷத் வாங்க்ஷி யோடு
சேகுறு ஜலாவ ஹப்பேர் செறியுங்காங் கேய மாகும்.

(இ—ள்.) மேக:, முஸ்தா, அம்புதர:, ஜீமூத:, பத்ரமுஸ்த:, ராஜகஸேரு:, ஜலத:, அப்த: வ்ருஷத்வாங்க்ஷீ, ஜலாவஹ:, காங்கேய:; (24)

### நதிக்கோரைக்கிழங்கின் பெயர்.

எண்ணிய கனத்தி னோடு மெழிற்குரு விந்தைப் பேரும்
நண்ணிய வராகத் தோடு நவில்கோரைக் கிழங்கின் பேராம்
திண்ணிய பிண்ட முஸ்தம் தெரியுநா கரமே யென்றும்
மண்ணிய நதிகீ ரத்தின் மருவிடுங் கோரை யின்பேர்.

(இ—ள்.) கந:, குருவிந்தக:, வராக: இவை கோரைக் கிழங்கின் பெயர்கள். பிண்டமுஸ்த:, நாகர: இவை நதி தீரத்துக் கோரைக் கிழங்கின் பெயர்கள். (25)

## நீர்க் கோரைக்கிழங்கின் பெயர்.

ஜலமுஸ்தம் ஜலஜம் தாச புரத்தொடு சைவா லந்தான்
நலமுறு வானே யம்மே நவில்பரி பேல வப்பேர்
நிலவுகை வர்த்தி முஸ்தம் நிகழ்ஜீவி தாஹ்வ யத்தோ
டுலவிய நாம மெல்லாம் உரைத்திடும் நீர்க்கோ ரைக்கே.

(இ—ள்.) ஜலமுஸ்தம், ஜலஜம், தாசபுரம், சைவாலம், வானேயம், பரிபேலவம், கைவர்த்திமுஸ்தம், ஜீவிதாஹ்வயம் இவை நீர்க்கோரைக்கிழங்கின் பெயர்கள். (26)

## பற்பாடகத்தின் பெயர்.

மன்னுபற் படகம் ரேணு மருவிய கவசம் பாம்சு
உன்னுத்ருஷ் ஞாரி சீதப் பிரியமே ரஜஸ்பித் தாரி
துன்னுநல் ஸூதிக்த மேபற் படம்வா திக்த மென்ப
பன்னுபற் பாட கப்பேர் பகர்வர்ம கண்ட கம்மே.

(இ—ள்.) பற்படக:, ரேணு:, கவச:, பாம்சு:, த்ருஷ்ஞாரி:, சீதப்ரிய:, ரஜ:, பித்தாரி:, ஸூதிக்த:, பற்பட:, வரதிக்த:, வர்மகண்டக: இவை பற்பாடகத்தின்பெயர்கள்.

## வெட்டிவேரின் பெயர்.

வாலகம் ஜலமே யம்பு வாரியே தோயம் வஜ்ரம்
கோலமார் கசம்ஹ்ரீ பேரம் குலவிய கேச்யம் பிங்கம்
ஏலுறு முதீச்சி யத்தோ டிலகுமா சமனப் பேரும்
நூலவர் வெட்டி வேரின் பெயரென நுவல்வ ரன்றே.

(இ—ள்.) வாலகம், ஜலம், அம்பு, வாரி, தோயம், வஜ்ரம், கசம், ஹ்ரீபேரம், கேச்யம், பிங்கம், உதீச்யம், ஆசமனம் இவை வெட்டிவேரின் பெயர்கள். (28)

### பேய்ப்புடலின் பெயர்.

குலகமே பீஜ கர்ப்பம் கொழுங்கற்க சச்ச தப்பேர்
நிலவுபாண் டுகமே பாண்டு பலமொடு படோல மென்ப
உலவுகா ஸமர்த்த னத்தோ டோதுரா ஜீப லந்தான்
தொலைவில்குஷ் டக்ன நாக பலமேபேய்ப் புடலின் பேராம.

(இ—ள்.) குலக:, பீஜகர்ப்ப:, கற்கசச்சத:, பாண்டுக:, பாண்டுபல:, படோல:, காஸமர்த்தந:, ராஜீபல:, குஷ்டக்ந:, நாகபல: இவை பேய்ப்புடலின் பெயர்கள். (29)

### மஞ்சளின் பெயர்.

பீதிகா பிங்கா கௌரி பெருகிய ஹரித்ரா பீதா
நீதியாம் விஷக்னி யோடு நிகழ்வுறு தீர்க்க ரங்கா
ஓதுமங் களப்ர தாவே யுயர்க்ருமிக் நாநி சாவே
நிதுநிர் ஜயந்தி யோடு நிகழ்ஹ்ருத்வி லாச னீயும்.

(இ—ள்.) பீதிகா, பிஙகா, கௌரீ, ஹரித்ரா, பீதா, விஷக்நீ, தீர்க்கரங்கா, மஙகளப்ரதா, க்ருமிக்நா, நிசா, ஜயந்தீ, ஹ்ருத்விலாஸநீ; (30)

உள்ளுராஞ் சனிமே தக்நீ யொளிஜ்வராந் திகாவே பின்னும்
தள்ளறு ரஜனி யோடு தயங்குவர் ணவதி யென்ப
ஒள்ளிய ஹரிதா வோடு முயர்வர வர்ணி னீதான்
தெள்ளுகாஞ் சனியே யென்றுஞ் செப்புவர் மஞ்ச ளின்பேர்

(இ—ள்.) ரஞ்சநீ, மேதக்நீ, ஜ்வராந்திகா, ரஜநீ, வர்ணவதீ, ஹரிதா, வரவர்ணிநீ, காஞ்சநீ இவை மஞ்சளின் பெயர்கள். (31)

## மரமஞ்சளின் பெயர்.

பகர்வறு பசம்ப சாவே பரும்பீதா ஹேம காந்தா
நிகரிலாப் பீத தாரு நெடுங்கடங் கடேரி தார்வி
துகளறு குசும்ப காவே சொல்லுகா லேய கந்தான்
திகழுநல் லேம வர்ண வதிபீத துருவே சேரும்.

(இ—ள்.) பசம்பசா, பீதா, ஹேமகாந்தா, பீததாரு, கடங்கடேரீ, தார்வீ, குசும்பகா, காலேயகம், ஹேமவர்ண வதீ, பீதத்ரு; (32)

முந்துகா லாய கம்மே முகிழ்தாரு ஹரித்தி ராவும்
நந்துறு பீத சந்த னத்தொடு பர்ஜன் யாவும்
உந்துபீ தாஹ்வ பீத கந்தாரு நிசாவே யோதும்
பிந்திடும் ரஜனீ காஷ்டப் பேருறும் மரமஞ் சட்கே.

(இ—ள்.) காலாயகம், தாருஹரித்ரா, பீதசந்தநம், பர்ஜந்யா, பீதாஹ்வா, பீதகம், தாருநிசா, காஷ்டரஜநீ இவை மரமஞ்சளின் பெயர்கள். (33)

## பூலாங்கிழங்கின் பெயர்.

ஓதுறு வதூவி னோடே யொளிர்ப்ருது பலாசி காவும்
தீதிலா ஷட்கி ரந்தா திகழ்ஸடீ பலாச மென்ப
மோதுறு சுகந்த மூலா முதியசந் திராணி யாகும்
கோதறுஞ் சந்த்ர கந்தா குலவுகந் தாலிப் பேரும்.

(இ—ள்.) வதூ, ப்ருதுபலாசிகா, ஷட்க்ரந்தா, ஸடீ பலாச:, ஸுகந்தமூலா, சந்த்ராணீ, சந்த்ரகந்தா, கந்தாலீ;

முருகுறு தூர்வி தேயா மொழியுநற் சுவ்ரதா வோடு
பெருகிய ஸடியு மென்று பேசுமிந் நாம மெல்லாம்

மருவிய மருத்து நூலின் வல்லவர் மகிழ்ந்து போற்றும்
பொருவில்பூ லாங்கி ழங்கின் பெயரெனப் போற்று வாமே.

(இ—ள்.) தர்விதேயா, ஸுவ்ரதா, ஸடீ இவை பூலாங்கிழங்கின் பெயர்கள். (35)

### * கந்தபலாசத்தின் பெயர்.

வாசமார் தாப ஸீயே வருபத்ர கந்த காவும்
வீசுறு ஜ்வலனி யோடு விளங்குதிக் தகந்தா வென்ப
வசறும் ஹரித்ரா வோடே யிலங்கு ஸ்தூ லகமி யாவும்
பேசுகஸ் தூரி மஞ்சள் பிறங்குகந் தபலா சப்பேர்.

(இ—ள்.) தாபஸீ, பத்ரகந்தகா, ஜ்வலநீ, திக்தகந்தா, ஸ்தூலஹரித்ரா, கந்தபலாச: இவை கஸ்தூரி மஞ்சளின் பெயர்கள். (36)

### புஷ்கர மூலத்தின் பெயர்.

மூலம்புஷ் கரமூ லம்மே மொழியும்பௌஷ் கரமே வீரம்
ஞாலமே புகழும் புஷ்க ராஹ்வய மென்றே நாட்டும்
கோலம்புஷ் கரஜ டாவே குலவுகாச் மீர மின்ன
மேலவர் வியந்து கூறும் புஷ்கர மூலத் தின்பேர்.

(இ—ள்.) மூலம், புஷ்கரமூலம், பௌஷ்கரம், வீரம், புஷ்கராஹ்வயம், புஷ்கரஜடா, காச்மீரம் இவை மேட்டுத் தாமரைக்கிழங்கின் பெயர்கள். (37)

### சிறுதேக்கின் பெயர்.

சக்கர மர்தா பார்க்கி சாற்றுகர்த் தபசா கம்மே
முக்கிய பார்க்க வாவா தாரியே மொழியும் பத்மா
தக்கவங் கார்வல்லீ தழுவுநற் ப்ருங்க ஜாவே
இக்குவ லயமும் பிர்ம்ஹ சுவர்ச்சலா வென்று போற்றும்.

---

*இதனைப் பூலாங்கிழங்கின் பேதமெனவும் கூறுவர்.

(இ—ள்.) சக்ரமாதா, பார்க்கீ, கார்த்தபசாகம், பார்க்கவர், வாதாரீ, பத்மா, அங்காரவல்லீ, ப்ருங்கஜா, ப்ரம்ஹசுவர்ச்சலா; (38)

பின்னுங்கா ஸக்னி யோடு பிராஹ்மண யஷ்டி காவும்
முன்னிய பஞ்சி யென்றே மொழிந்திடு நாமம் யாவும்
மன்னுமா வரையின் மேவு மரங்களிற் சிறுதேக் கெனுஞ்ற
பன்னுவர் புலவ ரிந்தப் பாரினு ளொரு மாதோ.

(இ—ள்.) காஸக்நீ, ப்ராம்ஹணயஷ்டிகா, பஞ்சீ, இவை சிறுதேக்கின் பெயர்கள். (39)

## வட்டத்திருப்பியின் பெயர்.

மாலதீ வரதிக் தாவே மருவுமம் பஷ்ட கீதான்
கோலமார் வராவே தேவீ கூறிடும் பாடி காவே
பானுறும் பாடா வோடு பகர்பாப சேலி காவும்
கோலிய வம்பஷ் டாவும் குறித்திடும் ப்ருஹத்திக் தாவும்;

(இ—ள்.) மாலதீ, வரதிக்தா, அம்பஷ்டகி, வரா, தேவீ, பாடிகா, பாடா, பாபசேலிகா, அம்பஷ்டா, ப்ருஹத்திக்தா; (40)

மற்றும்ஸ்தா பனியி னேடு மகிம்கிரி விருதா வுந்தான்
உற்றிடும் பிராசீ னைவே யுயர்சுபா விருகி யென்றே
கற்றவர் போற்று மிங்குக் கருதிய நாம மெல்லாம்
முற்றுவட் டத்தி ருப்பி யாமென மொழிவா ரன்றே.

(இ—ள்.) ஸ்தாபநீ, த்ரிவ்ருதா, ப்ராசீநா, சுபா, வ்ருகீ இவை வட்டத்திருப்பியின் பெயர்கள். (41)

### ஸ்வாஸாரியின் பேயர்.

கருதிய பத்ம தீர்த்தம் கரைந்திடும் பதுமத் தோடு
பெரும்புஷ்க ரஸாக ரம்மே பேசுஸ்வா ஸாரீ யென்று
மருவுமிந் நாமம் யாவும் மதிவல்லோர் வகுத்துக் கூறும்
பொருவுஸ்வா ஸாரி வட்டத் திருப்பியின் பேதம் போற்றும்

(இ—ள்.) பத்மதீர்த்தம், பத்மம், புஷ்க்ரஸாகரம், ஸ்வா ஸாரி இவை வட்டத்திருப்பியின் ஓர் பேதமான ஸ்வாஸாரியின் பெயர்கள். (42)

### சிறுதமிழின் பேயர்.

கும்பீகா ஸோம வல்கம் குமுதாகட் பலமு மாகும்
நம்புறு மஹாகும் பாவே நவில்பத்ர வதியே பத்ரா
பம்புஸ்ரீ பர்ணி யோடு பரவிய விப்பே ரெட்டும்
அம்புவி மாந்தர் கூறும் அருஞ்சிறு குமிழின் பேரே

(இ—ள்.) கும்பீகா, ஸோமவல்கம், குமுதா, கட்பலம், மஹாகும்பா, பத்ரவதீ, பத்ரா, ஸ்ரீபர்ணீ இவை சிறுகுமிழின் பெயர்கள். (43)

### தேவதாருவின் பேயர்.

இந்திர தாரு தேவ காஷ்டமே யியல்சு ராஹ்வம்
இந்திர விருக்ஷ மோடு மிகழ்விலாப் பத்ர தாரு
வந்திடு கிலிமம் ஸ்நேக வித்தமே மருவுந் தாரு
நந்துறு மமர தாரு நறுமணங் கமழ்சு தாரு.

(இ—ள்.) இந்த்ரதாரு, தேவகாஷ்டம், ஸுராஹ்வம், இந்த்ரவ்ருக்ஷம், பத்ரதாரு, கிலிமம், ஸ்நேகவித்தம், தாரு, அமரதாரு, ஸுதாரு; (44)

நறையுறும் பூதி காஷ்டம் நன்மஹா தாரு வோடு
கறையுறு பத்ர காஷ்டம் கமழ்சுர தாரு வாகும்

அறைவுறு நாமம் யாவு மான்றவ ரறிந்து போற்றும்
குறைவிலாத் தேவ தாரு குறித்திடும் பெயரே யாகும்.

(இ—ள்.) பூதிகாஷ்டம், மஹாதாரு, பத்ரகாஷ்டம், ஸாரதாரு இவை தேவதாருவின் பெயர்கள். (45)

## வாஸனைப்புல்லின் பெயர்.

கத்த்ருணம் சகலம் பூதி கருதுரோ ஹிஷமே பௌரம்
தத்துறுந் த்ருணந் தோடு த்யாமகம் பூதி தந்தான்
சுத்தமாஞ் ச்யாம கப்பேர் சொல்தேவ தம்ச கம்மே
உத்தம பாட லத்தோ டுறுமிவை வாஸனைப் புல்.

(இ—ள்.) கத்த்ருணம் (கட்த்ருணம்), ஸகலம், பூதி:, ரோஹிஷம், பௌரம், த்ருணம், த்யாமகம், பூதிதம், ச்யாமகம், தேவதம்சகம், பாடலம் இவை வாஸனைப்புல்லின் பெயர்கள். (46)

## கடுக்காய்ப்பூ

சிருங்கியே குளீர ப்ருங்கி திகழ்நவாங் கினிவி ஷாணி
நெருங்குகற் கடசி ருங்கி நிகழ்கர்க்க டாஹ்வ யாவே
பெருங்குண வனஜ மூர்த்த ஜாவொடு குளீரா சக்ரா
ஒருங்குமா கோஷா சந்த்ராஸ் பதாகடுக் காய்ப்பூ வோதும்.

(இ-ள்.) ச்ருங்கீ, குளீரப்ருங்கீ, நவாங்கிநீ, விஷாணீ, கற்கடச்ருங்கீ, கர்க்கடாஹ்வயா, வனஜ மூர்த்தஜா, குளீரா, சக்ரா, மஹாகோஷா, சந்த்ராஸ்பதா இவை கடுக்காய்ப்பூவின் பெயர்கள். (47)

## ஆட்டுச் செவியின்பெயர்.

கண்ணிய மேஷ ச்ருங்கி கருதிடும் விஷாணி காவே
நண்ணிடும் சர்ப்ப தம்ஷ்ட்ரா நவிலுறும் விருச்சி காலீ
திண்ணிய வர்த்தி காவும் திகழ்தக்ஷி ணாவர்த் தாவும்
எண்ணிப ச்ருங்கி யோடுமிவையாட்டுச் செவியின் பேரே.

(இ—ள்.) மேஷச்ருங்கி, விஷாணிகா, ஸர்ப்பதம்ஷ்ட்ரா, வ்ருச்சிகாலீ, வர்த்திகா, தக்ஷிணாவர்த்தா, அஜச்ருங்கி இவை ஆட்டுச்செவியின் பெயர்கள் இதனை ஆடு தீண்டாப் பாளை எனவும் கூறுவர். (48)

### பேராமல்லியின்பெயர்.

பெருகிய சாலி பர்ணி பேசிடும் விதாரி கந்தா
முருகுறுந் தீர்க்க மூலா முகிழதி குஹாத்ரு வாவே
கருதாசு பத்ரி காவும் கமழ்திரி பர்ணீ ஸௌம்யா
தெரியுமம் சுமதி யோடு திகழ்ஸ்திரா பேரா மல்லி.

(இ—ள்.) சாலிபர்ணீ, விதாரிகந்தா, தீர்க்கமூலா, அதிகுஹா, த்ருவா, ஸுபத்ரிகா, த்ரிபர்ணீ, ஸௌம்யா, அம்சுமதீ, ஸ்திரா இவை பேராமல்லியின் பெயர்கள். (49)

### சிற்றுமல்லியின்பெயர்.

கலசீதா வனீகு ஹாவே கருதிய ப்ருஷ்டி பர்ணீ
உலைவிலாப் பிருதக் பர்ணி யுயரங்க்ரி பலாவே பர்ணீ
குலசிரு கால வின்னு க்ரோஷ்டுக புச்சி காவே
துலையில்சிற் றுமல் லிப்பேர் துன்னுமோ ரிலையு மாமே.

(இ—ள்.) கலசீ, தாவனீ, குஹா, ப்ருஷ்டிபர்ணீ (ப்ருச்நிபர்ணீ), ப்ருதக்பர்ணீ, அங்க்ரிபலா, பர்ணீ, ச்ருகாலவிந்நா, க்ரோஷ்டுக புச்சிகா இவை சிற்றுமல்லியின் பெயர்கள். இதனைஓரிலையெனவும் கூறுவர். (50)

### கண்டங்கத்திரியின்பெயர்.

தாவனீ கண்ட காரீ தவதிலா வியாக்ரீ க்ஷுத்ரா
ஓவில்கண் டகினீ துஷ்ப்ரா தர்ஷிணீ நிதிக்தி காவே

தாவுதுஸ் பர்சா வோடு தயங்குகண் டாலி காவும்
மேவிய கண்டங் கத்ரி மிக்கநற் பெயரா கும்மே.

(இ—ள்.) தாவநீ, கண்டகாரீ, வ்யாக்ரீ, க்ஷுத்ரா, கண்டகிநீ, துஷ்ப்ரதர்ஷிணீ, நிதிக்திகா, துஸ்பர்சா, கண்டாலிகா இவை கண்டங்கத்திரியின் பெயர்கள். (51)

## ஆற்றுமுள்ளியின் பெயர்.

பிருஹதி ஸிம்ஹி காவே பெருகுவார்த்தாகி யோடு
வருகுலீ விஷதா காந்தா மன்னிய ராஷ்ட்ரி காவும்
மருவிய ஸ்தூல கண்டா கீயொடு மஹதீ யென்ப
திருவளர் மஹோடி காவும் தேர்ந்திடு மாற்று முள்ளி.

(இ—ள்.) ப்ருஹதி, ஸிம்ஹிகா, வார்த்தாகீ, குலீ, விஷதா, காந்தா, ராஷ்ட்ரிகா, ஸ்தூலகண்டாகீ, மஹதீ, மஹோடிகா இவை ஆற்றுமுள்ளியின் பெயர்கள். (52)

வேறு

## கத்தரியின் பெயர்.

விளங்குறு வார்த்திகா விழையும் பண்டிகா
வளம்பெறு *பாண்டகீ மகிழ்வ் ருந் தாகியே
துளங்குவ்ருந் தாவொடு துன்னு மிப்பெயர்
உளம் பெறு நூலவர் உரைக்கும் கத்தரி.

(இ—ள்.) வார்த்திகா, பண்டிகா, பாண்டாகீ, வ்ருந்தாகீ, வ்ருந்தா இவை கத்திரியின் பெயர்கள். (53)

## நெருஞ்சிலின் பெயர்.

கண்டகத் ரிகத்தி னோடு கருதிடும் வ்யால தம்ஷ்ட்ரம்
விண்டிடுந் திரிகண் டந்தான் விளங்குகோ கண்ட கம்மே

---

* பாண்டாகீயின், குறுக்கல் விகாரம்.

பண்டுபக்ஷ கமே ஸ்வாது கண்டகம் மகிழ்ஷ டங்கம்
எண்டரும் ச்வதம்ஷ்ட்ரம் கண்டி யெழில் கோக்ஷு
[ரகமேயாகும்]

(இ—ள்.) கண்டகத்திரிக:, வ்யாளதம்ஷ்ட்ரக:, த்ரிகண்டக:, கோகண்ட:, பக்ஷக:, ஸ்வாதுகண்டக:, ஷடங்க:, ச்வதம்ஷ்ட்ர:, கண்டி, கோக்ஷுரக:; (54)

கூர்பெறுங்க்ஷுரகம் பின்னுங் குலவுப க்ஷடகந் தானும்
ஏர்பெறுங் கோக்ஷுரத்தோ டியல்கண்ட பலமுமெல்லாம்
பேர்பெறும் நெருஞ்சி லென்றே பேசுவர் ஆயுள் நுண்ணூல்
ஏர்பெற வறிந்து போற்று மியல்புடை மாந்தர் தாமே.

(இ—ள்.) க்ஷுரக:, பக்ஷடக:, கோக்ஷுர:, கண்டபல: இவை நெருஞ்சிலின் பெயர்கள். (55)

## பில்வத்தின் பெயர்.

பூதிமா ருதஞ்சை லூஷம் புனிதமார் சலாடு பில்வம்
மேதகு கந்த கர்ப்பம் மிகுவரா ருஹஞ்சாண் டில்யம்
தீதிலா ஹ்ருத்ய கந்தம் சிறந்தகர்க் கடமு மாகும்
ஓதிய வரிமே தத்தோ டுவப்புறு வாத ஸாரம்.

(இ—ள்.) பூதிம்ருத:, சைலூஷ:, சலாடு:, பில்வ:, கந்தகர்ப:, வராருஹ:, சாண்டில்ய:, ஹ்ருத்யகந்த:, கர்கட:, அரிமேத:, வாதஸார:; (56)

பரவுகண் டகமே லக்ஷ்மீ பலமும் ஸ்ரீபலமு மாகும்
விரவுமா பலத்தி னோடு வியனஸி தான னம்மே
கரவறு சத்திய கர்மா கழறுநல் ஸ்ரீயா ஹ்வந் தானும்
உரவுநீர்ச் சடையான் சூடும் உயர்வில்வ நாம மாமே.

(இ—ள்.) கண்டக:, லக்ஷ்மீபல:, ஸ்ரீபல:, மஹாபல:, அஸிதாநந: ஸத்யகர்மா ஸ்ரீயாஹ்வ: இவை பில்வத்தின் பெயர்கள். (57)

### முன்னையின் பெயர்.

மந்தன மரணி கேது மருவுரக் தாங்க மக்நி
மந்தன மக்னி மந்தம் மறுவறு கர்ணி காவே
முந்துஸ்ரீ பர்ணி யோடு முதியநா தேயி யாகும்
கந்தமார் வன்னி மந்தம் கழறுதர்க் காரி யும்பேர்.

(இ—ள்.) மந்தந:, அரணிகேது:, ரக்தாங்க:, அக்நிமந்தந:, அக்நிமந்த:, சர்ணிகா, ஸ்ரீபர்ணீ, நாதேயீ, வந்நிமந்த:, தர்க்காரீ; (58)

மற்றுமோர் ஜயாவி ஞேடு மருவிஜ யந்தி காவும்
உற்றவன் னிமத னம்மே உயரக்னி மதன மும்பேர்
சொற்றவா ரணிகத் தோடு சொல்லனந் தாவு மென்றும்
பெற்றவிப் பெயர்க ளெல்லாம் பேசிடு முன்னை யின்பேர்.

(இ—ள்.) ஜயா, விஜயந்திகா, வந்நிமதந:, அக்னிமதந:, ஆரணிக: இவை முன்னையின் பெயர்கள். (59)

### சிறுமுன்னையின் பெயர்.

தபனக்தே ஜோர்வி ருக்ஷம் தனுத்வசா விஜயா வோடு
விபினமர்ர் லகுமந் தம்மே விளங்குக்ஷுத் ராக்னி மந்தம்
சுபமுறு மரணி யோடு சொல்கண காரி காவும்
கபமுதல் நோயை நீக்குங் கமழ்சிறு முன்னை யின்பேர்.

(இ—ள்) ஸ்தபன:, தேஜோவ்ருக்ஷ:, தநுத்வசா, விஜயா, லகுமந்த:, க்ஷுத்ராக்னிமந்த:, அரணி:, கணகாரிகா இவை சிறுமுன்னையின் பெயர்கள். (60)

### வாகையின் பெயர்.

கடம்பரம் மயூர ஜங்கம் கட்வங்கம் பிரிய ஜீவம்
குடங்கடம் பிருது சிம்பம் குலவுஸ்யோ நாக மாகும்
தொட்டரும்டிண் டுகபல் லூகம் துன்னிடு மாலு கம்மே
படர்பல்கு வ்ருந்தா கம்ஜம் புகமென்றும் பகர லாகும்.

(இ—ள்.) கடம்பர:, மயூரஜங்க:, கட்வங்க: ப்ரியஜீவ:, குடங்கட:, ப்ரதுசிம்ப:, ஸ்யோநாக:, டிண்டுக:, பல்லூக:, அரலுக:, பல்குவ்ருந்தாக:, ஜம்புக:; (61)

சில்லகம் சுகநாசம்பின் தீர்க்க வ்ருந்தகமு மற்றை
எல்லுறு வாகை யின்பேர் எழில்பூத சாரத் தோடு
மல்லமர் நிஸ்ஸா ரம்வா தாரியே வஸந்த கம்மாம்
எல்லையில் பிரம ரேஷ்டம் சுநித்ரும மென்றே போற்றும்.

(இ—ள்.) சில்லக:, சுகநாஸ:, தீர்க்கவ்ருந்தக:, பூதஸார:, நிஸ்ஸார:, வாதாரி:, வஸந்தக:, ப்ரமரேஷ்ட:, ஸுநித்ரும: இவை வாகையின் பெயர்கள். (62)

### பெருங்குமிழின் பெயர்.

கம்பாரி ஸர்வதோ பத்ரா காச்மரீ காச்மர் யாவும்
வம்பரு ஹீரா க்ருஷ்ண வ்ருந்தகா மதுபர் ணீயும்
பம்புகாச் மர்யத் தோடு பகரும் ஸ்ரீ பர்ணி யுந்தானீ
இம்பரும் போற்று கின்ற எழிற்பெருங் குமிழின் பேரே.

(இ—ள்.) கம்பாரி, ஸர்வதோபத்ரா, காச்மரீ, காச்மர்யா, ஹீரா, க்ருஷ்ணவ்ருந்தகா, மதுபர்ணீ, காச்மர்ய: ஸ்ரீபர்ணீ இவை பெருங்குமிழின் பெயர்கள். (63)

### பாதிரியின் பெயர்.

பாடலர் வமோகா வோடு பகர்தாம்ர புஷ்பா ஸ்தாலீ
ஏடலர் வஸந்த தூதி யிருமம்பு வாஸி நீயும்
கோடுறு கால வ்ருந்தி காவொடு கும்பி காவும்
நாடுமிப் பெயர்கள் யாவும் நலமுறு பாதி ரிப்பேர்.

(இ—ள்.) பாடலா, அமோகா, தாம்ரபுஷ்பா, ஸ்தாலீ, வஸந்ததூதீ, அம்புவாஸிநீ, கால்வ்ருந்திகா, கும்பிகா இவை பாதிரியின் பெயர்கள். (64)

### வெண்பாதிரி, ஜீவகம் இவைகளின் பெயர்.

வெறிமிகும் பலேரு காவும் வியன்காஷ்ட பாட லாவும்
குறைவிலாச் சுவேத கும்பீ காகுபே ராக்ஷி கூறும்
நிறையும் வெண் பாதி ரிப்பேர் நீடிய மதுரம் ஸ்வாது
பெறுசிருங் ககமே ஸ்வேடம் பேசுதீர்க் காயு வென்ப.

(இ—ள்.) பலேருகா, காஷ்டபாடலா, ச்வேதகும்பீகா, குபேராக்ஷீ இவை வெண்பாதிரியின் பெயர்கள். மதுர:, ஸ்வாது:, ச்ருங்கக: ஸ்வேட:, தீர்க்காயு:; (65)

நீடுகூர்ச் சசீர்ஷ கம்மே நிரம்பிய சிரஜீ விப்பேர்
தேடுநல் ஜீவ கப்பேர் தெளிந்திடும் ஹ்ரஸ்ஸ வாங்கம்
வீடறும் ப்ராண தம்மே விரவுமிப் பெயர்க ளெல்லாம்
நாடுறும் ஜீவ கத்தை நாட்டிடு மென்பர் நூலோர்.

(இ—ள்.) கூர்ச்சசீர்ஷக, சிரஜீவீ, ஜீவக:, ஹ்ருஸ்வாங்க:, ப்ராணத: இவை ஜீவகத்தின் பெயர்கள். (66)

### ரிஷபகத்தின் பெயர்.

பந்துர மிந்தி ராக்ஷம் பகர்ந்திடும் ரிஷபந் தீரம்
சந்தமார் மார்த்ரு கம்மே சாற்றுகோ பதிபு மாகும்

முந்துதூர்த் தரம்வி ஷாணீ மொழிவ்ருஷம் வ்ருஷப மாகும்
வந்திடு ககுத்தி னோடு வயங்கிடும் ருஷப கப்பேர்.

(இ—ள்.) பந்தர:, இந்திராக்ஷ:, ரிஷப:, தீர:, மாத்ருக:, கோபதி:, தூர்த்தர:, விஷாணீ, வ்ருஷ:, வ்ருஷப:, ககுத் இவை ரிஷபகத்தின் பெயர்கள். (67)

### மேதை, மஹாமேதை இவைகளின் பெயர்.

மேதையின் பெயரே மேதா மணிச்சித்ரா சல்ய பர்ணீ
ஓதிய தாரவே யென்று முரைத்திடு வார்று யர்ந்தோர்
தாதலர் வசுவும் சித்ரா தருதேவ மணியி னோடு
தீதறு மஹாமே தாவும் திகழ்மஹா மேதை யின்பேர்.

(இ—ள்.) மேதா, மணிச்சித்ரா, சல்யபர்ணீ, தார இவை மேதையின் பெயர்கள். வஸுச்சித்ரா தேவமணி:, மஹாமேதா இவை மஹாமேதையின் பெயர்கள். (68)

### கஞ்சாவின் பெயர்.

மாதினீ மாதி கர்வும் மாதுகஞ் சாகி னீயும்
ஓதுதந்த் ராகி ருத்து முயர்பகு வாதி னீயும்
தீதுறு ரஞ்சி காவும் தெரிதிகழ் விஜயா தானும்
பேதுறு பங்கி கஞ்சாப் பெயரென வறைவ ரன்றே.

(இ—ள்.) மாதினீ, மாதிகா, மாது, கஞ்சாகினீ, தந்த்ராக்ருத், பஹுவாதினீ, ரஞ்சிகா, விஜயா, இவை கஞ்சாவின் பெயர்கள். (69)

### காகோலியின் பெயர்.

வளமுறு மதுரா க்ஷீரர் வயஸ்தாவே ஸ்வாது மாம்ஸீ
அளவிலாக் கர்ணி காவும் ஆரியகா கோலீ தானும்

தளகிறை சக்கி லாவும் தயங்குத்வாங் க்ஷோலி காவும்
தளையவிழ் வாய லோலீ தரித்திடுங் காகோ லிப்பேர்.

(இ—ள்.) மதுரா, க்ஷீரா, வயஸ்தா, ஸ்வாதுமாம்ஸீ, கர்ணிகா, காகோலீ, சுக்லா, த்வாங்க்ஷோலிகா, வாய லோலீ இவை காகோலியின் பெயர்கள். (70)

க்ஷீரகாகோலியின் பெயர்.

க்ஷீரகா கோலீ வீரா க்ஷீரசுக் லாபயஸ்வி*
சேரிதாங் க்ஷீர மதுரா நிகழ்க்ஷீர விஷாணி காவே
பேர்பெறு வயஸ்தா வோடும் பேசுமிந் நாம மெல்லா
சீர்பெறு புலவர் கூறும் க்ஷீரகா கோலி யின்பேர்.

(இ—ள்.) க்ஷீரகாகோலீ, வீரா, க்ஷீரசுக்லா, பயஸ்விநீ, க்ஷீரமதுரா, க்ஷீரவிஷாணிகா, வயஸ்தா இவை க்ஷீரகாகோ லியின் பெயர்கள். (71)

காட்டுளுந்தின் பெயர்.

காம்போஜீ கிருஷ்ண விருந்தா கருதிடு மாஷ பர்ணீ
சாம்புறு மார்த்ர மாஷா சவியுறு ஹம்ஸ மஷா
தேம்பெறு ஸிம்ஹ வின்னு நிகழச்வ புச்சி காவும்
மாம்சமா ஷாம ஹால ஹாவிவை வனவு ளுந்தே.

(இ—ள்.) காம்போஜீ, க்ருஷ்ணவ்ருந்தா, மாஷபர்ணீ, ஆர்த்ரமாஷா, ஹம்லமாஷா, ஸிம்ஹவிந்நா, அச்வபுச்சிகா, மாம்லமாஷா, மஹாலஹா இவை காட்டுளுந்தின் பெயர் கள். (72)

காட்டுப்பயிரின் பெயர்.

ஏற்றமார் சூர்ப்ப பர்ணீ யிருமுத்க பர்ணீ யென்ப
போற்றுமார் ஜாா கந்தி காவோடு புகலும் சிம்பீ

---

* பயஸ்விநீயின் கடைக்குறை.

சாற்றுசுஷூத் ரலஹா ஹ்ருஸ்வா தருகாட்டுப் பயிரின் பேரே
தோற்றுமார் வனஜா ரிங்கி ணிப்பெய ரதற்கே தோன்றும்.

(இ—ள்.) சூர்ப்பபர்ணீ, முத்கபர்ணீ, மார்ஜாரகந்தி கா, சிம்பீ, சூஷூத்ரலஹா, ஹ்ருஸ்வா, வநஜா, ரிங்கிணீ இவை காட்டுப் பயிரின் பெயர்கள். (73)

## ஜீவந்தியின் பெயர்.

ஜீவந்தி ஜீவ னீயா திகழ்ஜீவ வர்த்த னீயே
மேவுறு சாகச் ரேஷ்டா விரவிய யசஸ்க ரீயும்
தாவி ல்மாங் கல்ய நாமம் தக்கநற் சிவனீயும்
கார்வரு பாலை யாகும் நல்லஜீ வந்தி யின்பேர்.

(இ—ள்.) ஜீவந்தீ, ஜீவநீயா, ஜீவவர்த்தநீ, சாகச்ரேஷ் டா, யசஸ்கரீ, மாங்கல்யா, ஜீவநீ இவை ஜீவந்தி யென்னும் பாலைக் கீரையின் பெயர்கள். (74)

## அதிமதுரத்தின் பெயர்.

மதுயஷ்டீ யஷ்டீ யஷ்டீ மதுமதுஸ் ரவாவி னோடு
புதுமைபாம் யஷ்டி வாஹ்வம் புரிமது யஷ்டி காவும்
மதுரமாம் யஷ்டி காவும் மதுகமு மாகு மெல்லாம்
அதியதி மதுரத் துக்கே சொல்லிய நாம மாமே.

(இ—ள்.) மதுயஷ்டீ, யஷ்டீ, யஷ்டீமது, மதுஸ்ரவா, யஷ்ட்யாஹ்வம், மதுயஷ்டிகா, யஷ்டிகா, மதுகம் இவை அதிமதுரத்தின் பெயர்கள். (75)

## கிலீதநகத்தின் பெயர்

உற்றிடும் ஜலஜா வோடு முயர்ஸ்தல ஜாவு மாகும்
பெற்றிடு மதுபர் ணீயே பெருங்க்லீத நகமு மென்ப

சொற்றிடு க்லீதி காவும் துயராறு மதூலி காவும்
முற்றிய க்லீத னம்மும் மொழியதி மதூர பேதம்

(இ—ள்) ஜலஜா, ஸ்தலஜா, மதுபர்ணீ, க்லீதநகம், க்லீதிகா, மதூலிகா, க்லீதநம் இவை க்லீதநக மென்னும் அதிமதூர பேதத்தின் பெயர்கள். (76)

### ருத்தியின் பெயர்.

மங்கலம் வசுவி னோடு வருரிஷி ஸ்ருஷ்டா யோக்யம்
பொங்கிய ருத்தி வ்ருத்தி புரிஸர்வ ஜனப்ரி யாவே
இங்கிதச் சுகமே லக்ஷ்மி எழில்யுகம் ரதாங்க மென்ப
மங்குறுச் சித்தி யோடு மருவிடும் ருத்தி யின்பேர்.

(இ—ள்.) மங்கலம், வஸு, ரிஷிஸ்ருஷ்டா யோக்யம், ருத்தி:, வ்ருத்தி:, ஸர்வஜநப்ரியா, ஸுகம், லக்ஷ்மீ:, யுகம், ரதாங்கம், ஸித்தி: இவை ருத்தியின் பெயர்கள். (77)

### நிலப்பூசனிக்கிழங்கின் பெயர்.

விடாலிகா பூகூஷ் மாண்டி வியன்கஜேஷ் டாவி தாரீ
படர்வுறு ஸ்வாது கந்தா பரவிய விருஷ்ய கந்தா
நடாவிய வ்ருஷ்ய வல்லீ நகுசிரு காலி காவும்
தடாவிய விதாரி காவே தக்கநற் சுக்கி லாவும்.

(இ—ள்.) விடாலிகா, பூகூஷ்மாண்டீ, கஜேஷ்டா, விதாரீ, ஸ்வாதுகந்தா, வ்ருஷ்யகந்தா, வ்ருஷ்யவல்லீ, ச்ருகாலிகா, விதாரிகா, சுக்லா; (78)

வேறு

வழுத்துமிப் பெயரொடு வாரி வல்லபா
ஒழித்துயர் நிலமிசை யோங்கு பூசனி

செழித்தநற் கிழங்கெனத் தெரிப்பர் நோயினைக்
கழித்துநற் பதம்பெறுங் கவிவல் லார்களே.

(இ—ள்.) வாரிவல்லபா இவை நிலப்பூசனிக் கிழங்கின் பெயர்கள். (79)

### பால்நிலப்பூசனிக்கிழங்கின் பெயர்.

இக்குகந் தாவே க்ஷீர விதாரியே யிக்ஷுவல்லீ
மிக்குயர் க்ஷீர வல்லீ விரவிய க்ஷீர சுக்லா
தக்கநல் க்ஷீர கந்தா தயங்கிடும் பயஸ்வி னீயும்
புக்கபால் நிலத்தி னோங்கும் பூசனிக் கிழங்கின் பேராம்.

(இ—ள்.) இக்ஷுகந்தா, க்ஷீரவிதாரி, இக்ஷுவல்லீ, க்ஷீரவல்லீ, க்ஷீரசுக்லா, க்ஷீரகந்தா, பயஸ்வினீ இவை பால் நிலப்பூசனிக்கிழங்கின் பெயர்கள். (80)

பெருநிலப் பூசனிக் கிழங்கின் பேரிற்கே
இருளிநற் கிழங்கென வியம்பு வாரினி
மருவுபால் பூசனிக் கிழங்கை மன்னுபா
லிருளிநற் கிழங்கெனும் இருந்தென் னாடதில்.

(இ—ள்.) நிலப்பூசனிக்கிழங்கிற்கு இருளிக்கிழங்கெனவும், பால்நிலப்பூசனிக்கிழங்கிற்கு பாலிருளிக்கிழங்கெனவும் தென்னாட்டில் கூறுவர். (81)

### பூனைக்காலியின் பெயர்.

கண்டலா வாத்ம குப்தா கபிகச்சூ லாங்க லீயே
மண்டுமற் கடியே சண்டா மருவிடு மஹர்ஷ பீயே

சண்டரு ஸ்வயங்குப் தாவு மோர்தார பிக்ர ஹாவே
பண்டைநூற் புலவர் போற்றும் பகர்பூனைக் காலி யின்பேர்.

(இ—ள்.) கண்டலா, ஆத்மகுப்தா, கபிகச்சூ, லாங்கலீ; மற்கடீ, சண்டா, மஹர்ஷபீ, ஸ்வயங்குப்தா, தாரபிக்ரஹா இவை பூனைக்காலியின் பெயர்கள். (82)

## சிறுபூனைக்காலியின் பெயர்.

ததிபுஷ்பீ விருஷபீ போடு தக்ககட் வாங்கீ கட்வா
துதிபெறுங் காகாண் டீயே சூகர பாதி காவும்
பதிதரும் பெரும்பர் யங்க பாதிகா வென்ற வெல்லாம்
மதியுறு புலவர் கூறும் மகிழ்சிறு பூனைக் காலி.

(இ—ள்.) ததிபுஷ்பீ, வ்ருஷபீ, கட்வாங்கீ, கட்வா, காகாண்டீ, சூகரபாதிகா, பர்யங்கபாதிகா இவை சிறுபூனைக்காலியின் பெயர்கள். (83)

## நீர் ஆரையின் பெயர்.

குக்குடம் சிகியே ஸூசி பத்திரம் ஸ்வஸ்தி கந்தான்
தக்கநற் சிதிவா ரம்மே தழுவிய சிதிவ ரப்பேர்
மிக்கஸ்ரீ வார கம்ஸூச் யாஹ்வமு மிகுதி யாப
மக்களே போற்று கின்ற மருவுநீ ராரை யின்பேர்.

(இ—ள்.) குக்குட:, சிகீ, சூசிபத்ர:, ஸ்வஸ்திக:, சிதிவார:, சிதிவர:, ஸ்ரீவாரக:, ஸூச்யாஹ்வ: இவை நீர் ஆரையின் பெயர்கள். (84)

## சிறுபீளையின் பெயர்.

பாவிய வுபல பேதம் பாஷாண பேத கத்தோ
டோவுறு மச்ம ஜித்து முயாச்ம பேத கப்பேர்

திரமுறு நகபித் திருஷஜ் ஜித்சிலா பேத முந்தான்
விரவிய வச்சு மக்னம் விளங்கிடும் சிறுபீளைப்பேர்.

(இ—ள்.) உபலபேத:, பாஷாணபேதக:, அச்மஜித், அச்மபேதக:, நகபித், த்ருஷஜ்ஜித், சிலாபேத:, அச்மக்ந: இவை சிறுபீளையின் பெயர்கள். (85)

### சிவகரந்தையின் பெயர்.

சின்னக்ரந் திநிகா முண்டீ ஸ்ராவணீ பிக்ஷு வாகும்
பன்னுப்ரவ் ரஜிதா வோடு பரிவ்ராஜீ யென்றும் போற்றும்
மன்னிய சிரவ ணஹ்வா மஹாசிரா வணிகா வும்மே [ம்.
உன்னருங் காந்தை யின்பே ரென்றன ருயர்ந்தோர் பின்னு

(இ—ள்.) சிந்நக்ரந்திநிகா, முண்டீ, ஸ்ராவணீ, பிக்ஷு, ப்ரவ்ராஜிதா, பரிவ்ராஜீ, ச்ரவணஹ்வா, மஹாச்ராவணிகா;

சொற்றவிந் நாம மன்றிச் சூழ்தரும் தபோத னவும்
முற்றிய ச்ரவண சீர்ஷி காவொடு லோப னீயா
பெற்றமுண் டிநிகா மற்றும் பிறங்கிடும் கதம்ப புஷ்பா
நற்றவிந் நாமம் முன்னே நவின்றிடு காந்தைக் கேயாம்.

(இ—ள்.) தபோதநா, ச்ரவணசீர்ஷிகா, லோபநீயா, முண்டிநிகா, கதம்பபுஷ்பிகா இவை சிவகரந்தையின் பெயர்கள். (87)

### நன்னாரியின் பெயர்.

சாரிவா கோப வல்லீ சாரதா கோப கன்யா
நேர்தாங் கோபா வோடு நிகழ்காஷ்ட ஸாரி பாவும்
சீரிய ப்ரதானி காவும் திகழ்லதா ஸ்போதா வென்ப
ஏர்பெறுங் கோப வல்லீ யெழில்ச்வேதா நன்னா றிப்பேர்.

(இ—ள்.) ஸாரிவா, கோபவல்லீ, சாரதா, கோபகந்யா, கோபா, காஷ்டஸாரிபா, ப்ரதாநிகா, லதாஸ்போதா இவை நன்னாறியின் பெயர்கள். (88)

## கருநன்னாறியின் பெயர்.

பத்திரா க்ருஷ்ண வல்லீ பழுதிலாக் க்ருஷ்ண மூலி
சுத்தசந் தனகோ பாவே சொல்லிய சந்த னாவும்
சத்திய க்ருஷ்ணு வோடு சந்தன சாரி பாவும்
அத்தமார் கருநன் னாறி யறைந்திடு நாம மாமே

(இ—ள்.) பத்ரா, க்ருஷ்ணவல்லீ, க்ருஷ்ணமூலீ, சந்தநகோபா, சந்தநா, க்ருஷ்ணு, சந்தநஸாரிபா இவை கருநன்னாறியின் பெயர்கள். (89)

## கார்ப்போகவரிசியின் பெயர்.

சந்திர லேகா வோடு சசிலேகா பூதி கர்ணீ
இந்துலே காசு வல்லீ யிகழ்வறு ஸோம வல்லீ
நந்துறும் அவல்கு ஜாவும் நாட்டிடும் ஸோம ராஜீ
கந்தமார் பாகு சீயே காலமே ஷீயு மென்ப.

(இ—ள்.) சந்த்ரலேகா, சசிலேகா, பூதிகர்ணீ, இந்துலேகா, ஸுவல்லி, ஸோமவல்லீ, அவல்குஜா, ஸோமராஜீ, பாகுசீ, காலமேஷீ; (90)

கூறிடுந் துர்க்கந் தாவும் குஷ்டநா சனீயே தானும்
நாறுபூ திபலா வோடு நவில் க்ருஷ்ண பலாவு மென்றே
ஏறிடும் நாம மெல்லா மியம்புநூல் வல்லோர் போற்றும்
வீறுகார்ப் போக மென்று விளம்பிய வரிசி யின்பேர்.

(இ—ள்.) துர்கந்தா, குஷ்டநாசநீ, பூதிபலா, க்ருஷ்ணபலா இவை கார்ப்போகவரிசியின் பெயர்கள். (91)

### மருக்காரையின் பெயர்.

மதனம்சல் யகமே ராடம் மருவுபிண் டீத கந்தான்
விதமுறு காஹா டம்மே விஷபுஷ்ப கம்மென் றோதும்
உதவுசர்த் தனமே பிண்டீ யுறுபலந் தகர மப்பேர்
புதருறு மருக்கா ரைக்கே போற்றிடும் பெயர்க ளாமே.

(இ—ள்.) மதந:, சல்யக:, ராட:, பிண்டீதக:, காஹாட:, விஷபுஷ்பக:, சர்தன:, பிண்டீபல:, தகர: இவை மருக்காரையின் பெயர்கள். (92)

### பேய்ச்சுரையின் பெயர்.

கடுகாலாம் புனியே தும்பீ கழறுக்ஷத் த்ரியவ ராவும்
கெடுவிலிக்ஷ்வா குலம்பா கிளக்குநல் திக்த பீஜா
வெடியுறு மஹாப லாவும் விளங்குபிண் டபலா வோடு
கொடியுறும் ராஜ புத்ரீ கொண்டபேய்ச் சுரையின் பேரே.

(இ—ள்.) கடுகாலாம்புநீ, தும்பீ, க்ஷத்ரியவரா, இக்ஷ்வாகு:, லம்பா, திக்த பீஜா, மஹாபலா, பிண்டபலா, ராஜ புத்ரீ இவை பேய்ச்சுரையின் பெயர்கள். (93)

### சுரைக்காயின் பெயர்.

தும்பியே மஹாப லாவும் துகளறு மலாபூ வோடு
வம்புபிண் டபலா வென்று வழுத்திடு மேலா பூவும்
நம்புறு சுரைக்கா யென்ப நவில்கோரக் ஷதும்பி தானும்
பம்புபூ தும்பி க்ஷீர தும்பியு மிவற்றின் பேதம்.

(இ—ள்.) தும்பீ, மஹாபலா, அலாபூ, பிண்டபலா, ஏலாபூ இவை சுரைக்காயின் பெபயர்கள். கோரக்ஷதும்பீ, பூதும்பீ, க்ஷீரதும்பீ இவை சுரைக்காயின்பேதம். (94)

## பேய்ப்பீர்க்கின் பெயர்.

காரகரீ தேவ தாளீ கருதிய தேவ தாடம்
விராவுறு வேணீ யோடு விருத்தகோ சமுமப் போராம்
ஆராலாகு விஷஹா மற்றைத் துன்னுஜீ மூதக ந்தான் [ர்.
பாராவுறு பேய்ப்பீர்க் கென்றே பன்னுவர் மருத்தி னூலோ

(இ—ள்.) காரகரீ, தேவதாளீ, தேவதாட:, வேணீ, வ்ருத்தகோச:, ஆகுவிஷஹா, ஜீமூதக: இவை பேய்ப்பீர்க்கின் பெயர்கள். (95)

## முள்வெள்ளரியின் பெயர்.

திரபுஸம் கடுகம் திக்தம் விபாண்டுவே தீர்க்க பர்ணீ
மருவுமூத் திரப லாவே மகிழஸ்தி பர்ணி னீயாம்
திரிவில்கர் கடிகா வோடு சேர்லதா வென்னும் பேரும் [ர்.
பெருகுமுள் வெள்ள ரிக்கே பேரெனச் சொல்வர் மேலோ

(இ—ள்.) த்ரபுஸம், கடுகம், திக்தம், விபாண்டு:, தீர்க்கபர்ணீ, மூத்ரபலா, ஹஸ்திபர்ணிநீ, கர்கடிகாலதா, இவை முள்வெள்ளரியின் பெயர்கள். (96)

## வெள்ளரியின் பெயர்.

அசைதந்த பலாவே ஸ்தூலா வணிதோய பலாவே யாகும்
நசையுறு லோம சாவும் நவில்முனி யூரு வாரு
வசையுறும் வ்யாள பத்ரா வனமுறு கர்க்க டீயும்
இசையுறும் வெள்ள ரிக்கே யியம்பிய நாம மாமே.

(இ—ள்.) தந்தபலா, ஸ்தூலா, தோயபலா, லோமசா, உர்வாரு:, வ்யாளபத்ரா, கர்கடீ இவை வெள்ளரியின் பெயர்கள். (97)

### வெள்ளரிப்பழத்தின் பெயர்.

காண்டகம் வாலு ஸ்நிக்த பலாவோடு கருது மப்பேர்
நீண்டநல் மதுரஞ் சேர்ந்த பலாவென நிகழும் பேரும்
மூண்டநீர் வாலு கம்மே மொழியுமிந் நாமம் யாவும் [ம்.
வேண்டிடு முலகோர் போற்றும் வெள்ளரிப் பழமே யாகு

(இ---ள்.) காண்டகம், வாலு, ஸ்நிக்தபலா, மதுரபலா, வாலுகம் இவை வெள்ளரிப்பழத்தின் பெயர்கள். (98)

### கக்கரியின் பெயர்.

கடுதலா பீத ஸாவே கர்கடீ த்ரபுஸீ யென்ப
அடுதலா மஸ்தி பர்ணீ யணிசர்த்தா சனிகா வாகும்
நெடுலோம சகண்டா வோடு நிரம்புமூத் ரபலாப் பேரும்
விடுகிலாக் கக்க ரிக்கே விளங்கிடும் பெயர்க ளாமே.

(இ---ள்.) கடுதலா, பீதஸா, கர்கடீ, த்ரபுஸீ, ஹஸ்தி பர்ணீ, சர்த்தாசநிகா, லோமசகண்டா, மூத்ரபலா இவை கக்கரியின் பெயர்கள். (99)

### பூசனிக்காயின் பெயர்.

கொழுகும்ப பலாவி னோடு கூஷ்மாண்டீ ஸோம ஸ்ருஷ்டா
எழுதரும் ப்ருஹத்ப லாவே யெழிலுறும் ஸ்திரப லாவும்
பழுதில்கூஷ் மாண்டி காவும் படருறும் பீதி காவும்
விழைவுறும் பூச னிக்காய் விளம்புநற் பெயரா கும்மே.

(இ---ள்.) கும்பபலா, கூஷ்மாண்டீ, ஸோமஸ்ருஷ்டா, ப்ருஹத்பலா, ஸ்திரபலா, கூஷ்மாண்டிகா, பீதிகா இவை பூசனிக்காயின் பெயர்கள். (100)

### தற்பூசிப்பழத்தின் பெயர்.

கலிங்கஞ்சித் திரவல் லீகம் கழறிடும் மாம்ஸ லந்தான்
இலங்குமாம் ஸபலத் தோடே யிருமது ரபல மாகும் [றும்
சலங்கொள்த்ருஷ் ணுப லம்வ்ருத் தபலஞ்சித் ரபல மென்
நலங்கிளர் சித்ர மென்றும் நாட்டுவர் தற்பூ சிக்கே.

(இ—ள்.) கலிங்க:, சித்ரவல்லீக:, மாம்ஸல:, மாம்ஸ பல: மதுரபல:, த்ருஷ்ணுபல:, வ்ருத்தபல:, சித்ரபல:, சித்ர: இவை தற்பூசியின் பெயர்கள். (101)

### பீர்க்கின் பெயர்.

வேறு

தாமார்க்க வத்தோடு ராஜ கோசா
தகிகர்க்கோ டகிபீத புஷ்பா தானும்
தேமார்ந்த மஹாஜாலீ ஹஸ்தி கோஷா
திகழ்கோச பலாதன்யா மஹாப லாவும்
வூமார்ந்த மஹாகோசா தகியே யென்று
வழுத்தியவிந் நாமமெலாம் வயங்கு நூலோர்
தீமார்க்கங் காட்டுகின்ற சீதஞ் சேருஞ்
செறிபீர்க்கின் பெயரென்றே செப்பி னூரால்.

(இ—ள்.) தாமார்கவ:, ராஜகோசாதகீ, கர்க்கோடகீ, பீதபுஷ்பா, மஹாஜாலீ, ஹஸ்திகோஷா, கோசபலா, தந்யா, மஹாபலா, மஹாகோசாதகீ இவை பீர்க்கின் பெயர்கள். (102)

### சிறு பீர்க்கின் பெயர்.

ஜாலினீக்ஷ்வேடா கோசா தகீக்ருதச் சித்ரா தானும்
கோலமார் கண்டா லீயே கொண்ம்ருதங் கபலி காவும்

ஏ லுறும் ஸாந்திக்தா வோடு மியல்க்ருத வேத னீயும்
பாலுறுஞ் சிறுபீர்க் கென்றே பன்னுவர் பாரி லுள்ளோர்.

(இ—ள்.) ஜாலிநீ, க்ஷ்வேடா, கோசாதகீ, க்ருதச்சித்ரா, கண்டாலீ, ம்ருதங்கபலிகா, ஸாந்திக்தா, க்ருதவேதநீ இவை சிறு பீர்க்கின் பெயர்கள். (103)

### * காட்டு அகத்தியின் பெயர்.

சந்த்ரகங் குசலீ யாம்ல பத்ரக மென்றே சாற்றும்
முந்துவா லுகாபர் ணம்மே முற்றிடு ச்லக்ஷ்ணத் வக்கும்
நந்துறும் யமள பத்ர கத்தொடச் மந்த கந்தான்
சந்தமார் காட்ட கத்திப் பெயரெனச் சாற்று வாரே.

(இ—ள்.) சந்த்ரக, குசலீ, ஆம்லபத்ரக:, வாலுகாபர்ண:, ச்லக்ஷ்ணத்வக், யமளபத்ரக:, அச்மந்தக: இவை காட்டகத்தியின் பெயர்கள். (104)

### மந்தாரையின் பெயர்.

தாமிர புஷ்பத் தோடு சமரிகந் கோவி தாரம்
தேமுறு காஞ்ச னாரம் தெரிகுலீ குண்ட லீயும்
பூமஹா யமள பத்ரங் குத்தால கமுமே போற்றும்
காமுறு மந்தா ரைக்கே கழறுவர் கற்று வல்லோர்.

(இ—ள்.) தாம்ரபுஷ்ப:, சமரிக:, கோவிதார:, காஞ்சநார:, குலீ, குண்டலீ, மஹாயமளபத்ர:, குத்தாலக: இவை மந்தாரையின் பெயர்கள். (105)

### வலம்புரியின் பெயர்.

ஓதுமா வர்த்த கியே யுயர்மஹா ஜாலீ யோடு
நீதிசேர் சர்ம ரங்கா நிகழ்நிந்து கினியே யாகும்

* இதனைச் சீமையகத்தியெனக் கூறுவர்.

நீதறு விபாண்டீ பீத நீலகா பீத புஷ்பா
கோதறு மிப்பேர் யாவும் குறித்திடும் வலம்பு ரிப்பேர்.

(இ—ள்.) ஆவர்த்தகீ, மஹாஜாலீ, சர்மரங்கா, திந்து கிநீ, விபாண்டீ, பீதநீலகா, பீதபுஷ்பா இவை வலம்புரி யின் பெயர்கள். (106)

## சணலின் பெயர்.

சணபுஷ்பீ மால்ய புஷ்பீ சணகண்டி காவே சாற்றும்
குணமுறும் வமனீ யோடு கொழுங்கடு திக்த கர்வும்
மணமுறும் பிருஹத் புஷ்பீ மஹாசணம் என்ற பேரும்
உணர்வுறு மேலோர் கூறும் உயர்சணல் நாம மாமே.

(இ—ள்.) சணபுஷ்பீ, மால்யபுஷ்பீ, சணகண்டிகா, வமநீ, கடுதிக்தகா, ப்ருஹத்புஷ்பீ, மஹாசண: இவை சணலின் பெயர்கள். (107)

## கோவையின் பெயர்.

துண்டிகா பீலு பர்ணீ துண்டிகே ரபலா வாகும்
மண்டிய துண்டீ கோஹ்வா மணிரக்தபலாவே பிம்பீ
பண்டரு மொழியா ரோஷ்டோ பமபலா வென்னும் பேரும்
எண்டருங் கோவைக் கேதா னியம்பிடும் நாம மாமே.

(இ—ள்.) துண்டிகா, பீலுபர்ணீ, துண்டிகேரபலா, துண்டீ, கோஹ்வா, ரக்தபலா, பிம்பீ, ஓஷ்டோபமபலா, இவை கோவையின் பெயர்கள். (108)

## கடுக்காயின் பெயர்.

சேதகீ விஜயா பத்யா சிவாபயா ஹரீத கீயும்
பேதமார் ப்ராண தாநந் தினீயொடு ப்ரபத்தி யாவும்

பூதனு லவண வர்ஜீ புகன்றிடு மவ்ய தாவே
மேதகு ரேச கீஹை மவதியே ச்ரேய ஸீயும்.

(இ—ள்.) சேதகீ, விஜயா, சிவா, அபயா, ஹரீதகீ, ப்ராணதா, நந்திநீ, ப்ரபத்யா, பூதநா, லவணவர்ஜீ, அவ்ய தா, ரேசகீ, ஹைமவதீ, ச்ரேயஸீ; (109)

வனதுர்க்கி காயஸ் தாவே வயங்குஜீ வந்தி தானும்
துனியறும் வயஸ்தா வோடு சொல்ஜயா பாஞ்சா லீயும்
பனியுறும் ரோஹி ணீயே பகரமிர் தாவு மென்ப
நனியுணர் புலவர் யாரும் நவின்றிடுங் கடுக்காய்ப் பேரே.

(இ—ள்.) வநதுர்க்கீ, காயஸ்தா, ஜீவந்தீ, வயஸ்தா, ஜயா, பாஞ்சாலீ, ரோஹிணீ, அமிர்தா இவை கடுக்காயின் பெயர்கள். (110)

## தான்றிக்காயின் பெயர்.

வாசந்தம் கல்கம் பூத வாசங்கர் ஷபல மக்ஷம்
பேசனி லக்னந் தைல பலந்துஷம் பஹேட கந்தான்
வீசுஸம் வர்த்த கம்வி பீதகம் விஷக்ன மென்ப
தேசுஹார் யங்க லித்ரு மம்பஹு வீர்யந் தான்றி.

(இ—ள்.) வாஸந்த:, கல்க:, பூதவாஸ:, கர்ஷபல:, அக்ஷ:, அநிலக்ந:, தைலபல:, துஷ:, பஹேடக:, ஸம்வர்த் தக:, வீபீதக:, விஷக்ந:, ஹார்ய:, கலித்ரும:, பஹுவீர்ய: இவை தான்றிக்காயின் பெயர்கள். (111)

## நெல்லிக்காயின் பெயர்.

பஞ்சசா ஸாவ யஸ்தா பகர்ஜாதீ பலர ஸந்தான்
அஞ்சிடாக் காயஸ் தாவே அன்னமிர் தபல மென்ப

தஞ்சுறு சிவமே வ்ருக்ஷயம் தழுவுதாத் ரீப லப்பேர்
எஞ்சுமா மலகம் நெல்லி யியம்புஸ்ரீ பலமு மப்பேர்.

(இ—ள்.) பஞ்சரஸா, வயஸ்தா, ஜாதீபலரஸ:, காயஸ்தா, அம்ருதபல:, சிவ:, வ்ருக்ஷ்யபல:, தாத்ரீபல:, ஆமலக:, ஸ்ரீபல: இவை நெல்லிக்காயின் பெயர்கள் (112)

### சரக்கொன்றையின் பெயர்.

ரேசனம் வியாதி ஹாவா ரேவதங் கர்ணி காரம்
வாசமா ரக்வ தம்மே வருதீர்க்க பல மேயாகும்
பேசிடுங் கர்ணீ யோடு பெருஞ்சது ரங்கு லந்தான்
ஏசறு சரக்கொன் றைக்கே யியம்பிடும் பெயர்க ளாமே.

(இ—ள்.) ரேசந:, வ்யாதிஹா, ஆரேவத:, கர்ணிகார:, ஆரக்வத:, தீர்க்கபல:, கர்ணீ, சதுரங்குல: இவை சரக் கொன்றையின் பெயர்கள். (113)

### கொன்றையின் பெயர்.

கிருதமா லகம்சம் யாகம் கிளத்துநல் வ்யாதி காதம்
கருதுமா ரோக்ய சிம்பீ கர்ணிகா ரமுமே யாகும்
பெருகுவ்யாத் யந்த கந்தான் ப்ரக்ர ஹ மென்றுங் கூறும்
விரவுறு ராஜ விருக்ஷம் விளம்பிடுங் கொன்றை யின்பேர்.

(இ—ள்.) க்ருதமாலக:, சம்யாக:, வ்யாதிகாத:, ஆரோக்பசிம்பீ, கர்ணிகார:, வ்யாத்யந்தக:, ப்ரக்ரஹ:, ராஜ வ்ருக்ஷ: இவை கொன்றையின் பெயர்கள். (114)

### தந்தியின் பெயர்.

தந்திசீக் ராநி கும்பா தருமுப சித்ரா வோடு
முந்திய குணப்ரி யாவு மொழிமகூ லகமுந் தானும்

பிந்திய விசல்லி யாவும் பேருதும் பரபர் ணீயும்
சந்தமார் நூலோர் போற்றுந் தந்தியின் பெயரா மென்ப.

(இ—ள்.) தந்தீ, சீக்ரா, நிகும்பா, உபசித்ரா, குணப்ரியா, மகூலகை:, விசல்யா, உதும்பரபர்ணீ இவைதந்தியின் பெயர்கள். (115)

## அரணியின் பெயர்.

அரணியே வராங்கி யோடு மரியவா வர்த்த கீயும்
புரணிசேர் ஜயாவ ஹாவும் புரிவிஷ பத்ர காவும்
சரணமே சேருஞ் கேச ருஹாவோடு சாரு மிப்பேர்
தரணியோர் மகிழ்ந்து போற்றும் தக்கநல் லரணி நாமம்.

(இ—ள்.) அரணீ, வராங்கீ, ஆவர்த்தகீ, ஜயாவஹா, விஷபத்ரகா, கேசருஹா இவை அரணியின் பெயர்கள். (116)

## நேர்வாளத்தின் பெயர்.

சாரகந் தந்தி பீஜம் தகுமலத் ராவி யோடு
நேரிய கும்பி பீஜம் நிகும்பாப் ஜநிகும் பம்பின்
பேர் கும்பி னீப லம்திந் ரீபலம் ரேச கந்தான்
சீர்ஜய பாலம் பீஜ ரேசகம் திகழ்நேர் வாளம்.

(இ—ள்.) ஸாரக:, தந்திபீஜம், மலத்ராவி, கும்பீபீஜம், நிகும்பாபீஜம், நிகும்ப:, கும்பிநீபல:, தித்திரீபல:, ரேசக:, ஜயபால:, பீஜரேசக: இவை நேர்வாளத்தின் பெயர்கள். 117

## எலிக்காதிலையின் பெயர்

திரவந்தீ சம்ப ரீசண் டாசித்ரா நியக்கு ரோதா
பரவிய ப்ரத்யக் ஸ்ரேணி பகர்விஷா புத்ரஸ் ரேணீ
காவுமூ ஷிகர் ஹ்வ யாவும் கருதுமா குபர்ணி காவும்
விரவெலிக் காதின் பத்ரம் விளம்பிய நாம மாமே.

(இ—ள்.) த்ரவந்தீ, சம்பரீ, சண்டா, சித்ரா, ந்யக்ரோதா, ப்ரத்யக்ச்ரேணீ, விஷா, புத்ரச்ரேணீ, மூஷிகாஹ்வயா, ஆகுபர்ணிகா இவைஎலிக்காதிலையின் பெயர்கள். (118)

## அவிரியின் பெயர்.

நீலினீ நீலி காவே நிகழ்காலா விசோத னீயும்
ஏலுறு தூணீ மோசா யிகழ்விலாப் பார வாஹீ
வாலிய ரஞ்ச னீயும் வருஜயா வஹாவே ராஜ்ஞீ
கோலிய கீர்த்தி னீயே குலவுநல் விஜயா வென்ப.

(இ—ள்.) நீலிநீ, நீலிகா, காலா, விசோதநீ, தூணீ, மோசா. பாரவாஹீ, ரஞ்ஜநீ, ஜயாவஹா, ராஜ்ஞீ, கீர்த்தநீ, விஜயா; (119)

அக்ரபத் ரகமே துத்தா யணிகேச ருஹமு மேற்கும்
முக்கிய க்ராம்யா வோடு முரணறு சகதே வந்தான்
தக்குறு முபபூ தம்மே தயங்குஶ்ரீ பலிகா வோடு
மிக்குறு மிப்பேர் யாவும் விளங்கிய வவீரி யின்பேர்.

(இ—ள்.) அக்ரபத்ரக:, துத்தா, கேசருஹ:, க்ராம்யா, ஸஹதேவ:, உபபூத:, ஶ்ரீபலிகா இவை அவிரியின் பெயர்கள். (120)

## மஹா நீலியின் பெயர்.

அமலாஶ்ரீ பலிகா துத்தா வருமஹா நீலி யோடு
நிமலமார் மேலா ராஜ நீலிகா வென்றே நாட்டும்
விமலமார் கேசார் ஹாவும் வியன்ப்ருச பத்திரி காவும்
சமமறு மஹாநீ லிக்கே சாற்றிடும் பெயர்க ளாமே.

(இ—ள்.) அமலா, ஸ்ரீபலிகா, அத்தா, மஹாநீலீ, மேலா, ராஜநீலிகா, கேசார்ஹா, ப்ருசபத்ரிகா இவைமஹா நீலியின் பெயர்கள். (121)

### சதுரக்கள்ளியின் பெயர்.

கண்டீரம் ஸ்நுஹியே வஜ்ர கண்டகம் ஸீஹுண் டந்தான்
மண்டுநிஸ் த்ரிம்ச பத்ர கத்தோடு மஹாவி ருக்ஷம்
சண்டமார் குடாவே ஸ்நுக்கே சமந்ததுக் தாவு மாகும்
எண்டரு மிவைக ளெல்லா மியம்பிடுஞ் சதுரக் கள்ளி.

(இ—ள்.) கண்டீர:, ஸ்நுஹீ, வஜ்ரகண்டக:, ஸீஹுண்ட:, நிஸ்த்ரிம்சபத்ரக:, மஹாவ்ருக்ஷ:, குடா, ஸ்நுக், ஸமந்ததுக்தா இவை சதுரக்கள்ளியின் பெயர்கள். (122)

### பிரமிப்பூண்டின் பெயர்.

சாதலா விமலா ஸாரீ ஸப்தலா மராலி காவே
தீதறு விதுலா தீப்தா திகழ்சர்ம கஷாவி னோடும்
ஓதிய பகுபே னவும் உயர்ந்திடு மமலா பேன
மேதகு பிரமிப் பூண்டின் மிகுபெய ரென்ப மேலோர்.

(இ—ள்.) ஸாதலா, விமலா, ஸாரீ, ஸப்தலா மராலிகா, விதுலா தீப்தா, சர்மகஷா, பகுபேநா, அமலா, பேநா இவை பிரமிப்பூண்டின் பெயர்கள். இதனைப் பிரமிய வழுக்கை என்பர். (123)

### க்ஷீரணீயின் பெயர்.

காஞ்சன க்ஷீரி யோடு கடுபர்ணீ கர்ஷிணீயும்
வாஞ்சையில் திக்த துக்தா அருஹியா வதியு மாகும்
பூஞ்சினை ஹேம துக்தா புகல்ஹைம வதியுங் கானில்
தீஞ்சிடு க்ஷீர ணீயே யென்றனர் தெரிந்த நூலோர்.

(இ—ள்.) காஞ்சநக்ஷீரீ, கடுபர்ணீ, கர்ஷிணீ, இக்ஷுதுக்தா, ஹிமாவதீ, ஹேமதுக்தா, ஹைமவதீ, க்ஷீரணீ இவை க்ஷீரணீயின் பெயர்கள். (124)

### ஸ்ர்வக்ஷீரீயின் பெயர்.

சுவர்ணதுக் தாவி னோடு சுவர்ணக்ஷீ ரிகாவே மற்றைக்
கவர்வுறு ஹேம க்ஷீரி கனகக்ஷீ ரியுமே யாகும்
தவறிலே மாஹ்வா ஸர்வ க்ஷீரியு மப்பே ராகும்
உவருறு காஞ்ச னீயும் உறுஸர்வ க்ஷீரி யின்பேர்.

(இ—ள்) ஸ்வர்ணதுக்தா, ஸ்வர்ணக்ஷீரிகா, ஹேமக்ஷீரீ, கநகக்ஷீரீ, ஹேமாஹ்வா, ஸர்வக்ஷீரீ, காஞ்சநீ இவை ஸர்வக்ஷீரியின் பெயர்கள். (125)

### சிவதையின் பெயர்.

திரிவிருத் ச்யாமா காலா திகழுங்கா ளிந்தீ யோடு
மருவிய கால மேஷீ மகிழ்சுஷே ணீயு மாகும்
பெரியமா லவிகா வர்த்த சந்திரா வென்ற பேரும்
தெரிமசூ ரவித லாவும் சிறந்தநற் சிவதை யின்பேர்.

(இ—ள்.) த்ரிவ்ருத், ச்யாமா, காலா, காளிந்தீ, காலமேஷீ, ஸுஷேணீ, மாலவிகா, அர்த்தசந்த்ரா, மஸூரவிதலா இவை சிவதையின் பெயர்கள். (126)

### வெண்சிவதையின் பெயர்.

திரிபண்டீ ஸரலா வோடு திரிவிருத் சுக்ர பாண்டீ
பொருவில்சர் வாநு பூதி புகழ்திரி புடாவே யென்ப
தெரிகுமு தகந்தி னீயே திரயஸ்ரா வென்னும் பேரும்
கரியகா காக்ஷி யோடு கழறும்வெண் சிவதைப் பேராம்.

(இ-ள்.) த்ரிபண்டீ, ஸரலா, த்ரிவ்ருத், சுக்ர பாண்டீ, ஸர்வாநுபூதி:, த்ரிபுடா, குமுதகந்திநீ, த்ரயஸ்ரா, காகாக்ஷீ இவை வெண்சிவதையின் பெயர்கள். (127)

## பேய்த்தும்மட்டியின் பெயர்.

இந்திர வாருணீயே யிந்த்ராஹ்வா வைந்திரீயும்
இந்திர வாருவோடு மெழில்மிரு காதனீயும்
சந்தமில் கவாதனீக்ஷுத் ரபலாவே வ்ருஷபாக்ஷிப்பேர்
வந்திடுங் கவாக்ஷி யோடு வளர்பேய்த்தும் மட்டியின்பேர்.

(இ-ள்.) இந்த்ரவாருணீ, இந்த்ராஹ்வா, ஐந்த்ரீ, இந்த்ரவாரு:, ம்ருகாதநீ, கவாதநீ, க்ஷுத்ரபலா, வ்ருஷபாக்ஷீ, கவாக்ஷீ இவை பேய்த்தும்மட்டியின் பெயர்கள். (128)

## வரித்தும்மட்டியின் பெயர்.

பெருகிய வாத்மரக்ஷா பேசிடுந் த்ரபுஸீயோடு
வருமஹா பலாவு மற்றை வளர்சித்ர பலாவு மாகும்
உருவளர் த்ரபுஸா தானும் உயருநல் விசாலா வின்ன
கருதிடு நூலோர் கூறும் கமழ்வரித் தும்மட் டிப்பேர்.

(இ-ள்.) ஆத்மரக்ஷா, த்ரபுஸீ, மஹாபலா, சித்ரபலா, த்ரபுஸா, விசாலா இவை வரித்தும்மட்டியின் பெயர்கள். இதனை ஆற்றுத் தும்மட்டி எனவும் கூறுவர். (129)

## பம்பந்திராயின் பெயர்.

பல்தேவா கிரிஜாவோடு பலபத்ரா க்ருதத்திராணு
உலவிய த்ராயமாணு வுயர்த்ராயமாணகாவும்
குலவுவார் ஷிகீத்ரா யந்தீ கூறிடு மனுஜாவோடு
நிலவுமிந் நாமம் யாவும் நிகழ்பம் பந்திரா யின்பேரே.

(இ—ள்.) பலதேவர், கிரிஜா, பலபத்ரர், க்ருதத்ராணு, த்ரர்யமாணு, த்ரர்யமாணகா, வார்ஷிகீ, த்ராயந்தீ, அநுஜர் இவை பம்பந்திராயின் பெயர்கள். (130)

## சங்கங்குப்பியின் பெயர்.

சங்கினீ விஸர்ப்பி ணீயும் தளிருறும் யவதிக் தாவும்
பொங்கிய த்ருடபா தாவும் பொருவிலா யசஸ்க ரீயும்
கொங்குறு மக்ஷ பீடா குலவுறும் நேத்ர மீலா
இங்கிவை நாகு லீயு மெழிற்சங்கங் குப்பி யின்பேர்.

(இ—ள்.) சங்கிநீ, விஸர்ப்பிணீ, யவதிக்தா, த்ருடபாதா, யசஸ்கரீ, அக்ஷபீடா, நேத்ரமீலா, நாகுலீ இவை சங்கங்குப்பியின் பெயர்கள். (131)

## அழிஞ்சிலின் பெயர்.

அங்கோடம் ரேசி தீர்க்க கீலக மணிநிர் திஷ்டம்
மங்காத பீத ஸார மருவிய கந்த புஷ்பம்
கொங்கார்தாம் ரபலத் தோடு குறுகிய நிகோச கம்மும்
அங்கோல கத்தி னேடு மறைந்திடு மழிஞ்சி லின்பேர்.

(இ—ள்.) அங்கோட:, ரேசீ, தீர்க்ககீலக:, நிர்திஷ்ட:, பீதஸார:, கந்தபுஷ்ப:, தாம்ரபல:, நிகோசக:, ஆங்கோலக: இவை அழிஞ்சிலின் பெயர்கள். (132)

## நாயுருவியின் பெயர்.

கண்டியே சிகரி யோடு காமச்ச ரீயு மற்றை
அண்டிய ப்ரத்யக் புஷ்பீ யபாமார்க்கந் தானு மாகும்
எண்தரு பராக்புஷ் பீயே யெழிலுறு மர்க்க டீயும்
கொண்டிடும் கிணிஹி யோடு குலவிய வசிரம் பின்னும்.

(இ—ள்.) கண்டீ, சிகரீ, காமஞ்சரீ, ப்ரத்யக்புஷ்பீ, அபாமார்க:, பராக்புஷ்பீ, மர்க்கடீ, கிணிஹீ, வசீர:; (133)

மர்க்கட பிப்ப லீயும் மயூரகம் என்னும் பேரும்
தக்கநல் லதச்சல் யம்மே தழுவுதுர் கிரஹமும் போற்றும்
புக்கசை கரிகப் பேரும் புகழ்துர பிக்கி ரஹந்தான்
மிக்கவர் மகிழ்ந்து கூறும் விளங்குநா யுருவி யின்பேர்.

(இ—ள்.) மர்க்கடபிப்பலீ, மயூரக:, அத:சல்ய:, துர்க்ரஹ:, சைகரிக:, துரபிக்ரஹ: இவை நாயுருவியின் பெயர்கள். (134)

செந்நாயுருவியின் பெயர்.

க்ஷேத்ராபா மார்க்க மோடு சூழ்ரக்தா பாமார்க் கம்மும்
ஒத்திடும் ரக்த புஷ்பம் உயர்கபி ப்பிப்ப லீயும்
வித்திடு வசீர மோடும் விளங்குமிந் நாமம் யாவும்
கத்துசெந் நாயு *ருவி கழறிடு மென்ப மேலோர்.

(இ—ள்.) க்ஷேத்ர அபாமார்க்க:, ரக்த அபாமார்க்க:, ரக்தபுஷ்ப:, கபிப்பலீ, வசீர: இவை செந்நாயுருவியின் பெயர்கள். (135)

வாலுளுவையின் பெயர்.

†தேஜஸ்வீ தேஜ னீயே திகழ்தேஜாஹ்ற வாவே ஸீதா
நேசமார் வல்க லாவும் நிகழுச்வக் கினியு மென்ப
பேசுறு மஹீஹஜ ஸீயும் பிறங்குதே ஜவதி தானும்
வாசமார் பாரி ஜாதா வயங்குவா லுளுவை யின்பேர்.

---

*நாயுருவி—நீட்டல்.

†இது கடைக்குறை.

(இ—ள்.) தேஜஸ்வினீ, தேஜநீ, தேஜோஹ்வா, வீதா, வல்கலா, அச்வக்நீ, மஹௌஜஸீ, தேஜவதீ, பாரிஜாதா இவை வாலுளுவையின் பெயர்கள். (136)

### சிறுவாலுளுவையின் பெயர்.

பெருகுஜோ திஷ்ம தீயும் பிறங்குநல் லவணு மற்றைக்
கருதுஜோ திஷ்கா யாவும் கழறிடு மக்னி பாலா
பொருவில்துர் ஜராக வர்ண லதிகாவும் கடபீ தானும்
தெரிதரு சிறுவர் லோடு திகழ்ந்திடு முளுவை யின்பேர்.

(இ—ள்.) ஜோதிஷ்மதீ, லவணு, ஜோதிஷ்காயா, அக்நிபாலா, துர்ஜரா, லவர்ணலதிகா, கடபீ இவை சிறுவாலுளுவையின் பெயர்கள். (137)

### சிற்றரத்தையின் பெயர்.

புத்திர லாவே ரஸ்யா புகல்ரலா ராஸ்நா தானும்
கந்தமில் ச்ரேயஸீ யும் கவின்றி டுமதி ரலாவும்
சுத்தமாம் ரலநா வோடு சுகந்தமூ லாவு மப்பேர்
உத்தமச் சிற்ற ரத்தை யுயர்யுக்த ரலாவு மெனப.

(இ—ள்.) புத்திரலா, ரஸ்யா, ரலா, ராஸ்நா, ச்ரேயஸீ, அதிரலா, ரலநா, லகந்தமூலா, யுக்தரலா இவை சிற்றரத்தையின் பெயர்கள். (138)

### அமுக்கிராக்கிழங்கின் பெயர்.

கஞ்சுகா துரகி பல்யா கழறிய வராஹ கர்ணி
எஞ்சலி லச்வ கந்தா எழில்வாஜி கரியு மாகும்
தஞ்சமாம் வாஜி கந்தா தழுவச்வா வரோஹ கப்பேர்
மிஞ்சிடு மமுக்கி ராவின் கிழங்கென விழற்று வாரே.

(இ—ள்.) கஞ்சுகா, துரகீ, பல்யா, வாராஹகர்ணீ, அச்வகந்தா, வாஜிகரீ, வர்ஜிகந்தா, அச்வாவரோஹக: இவை அமுக்கிராக் கிழங்கின் பெயர்கள். (139)

### வெள்ளைச்சாரணையின் பேயர்.

விசாகமே கடில்ல கந்தான் விருச்சீரந் தீர்க்க பத்ரம்
திசாவுறு புனர்ன வாவும் திகழ்சசி வாடி காவும்
விசாலமாம் க்ஷுத்ர வர்ஷா பூவொடு விரைக டில்லம்
உசாவுமிந் நாமம் வெள்ளைச் சாரணை யுணர்த்து மென்ப.

(இ—ள்.) விசாக:, கடில்லக:, வ்ருச்சீர:, தீர்க்கபத்ர:, புநர்நவா, சசிவாடிகா, க்ஷுத்ரவர்ஷாபூ, கடில்ல: இவை வெள்ளைச்சாரணையின் பெயர்கள். (140)

### மூக்கிரட்டை, நீலச்சாரணையின் பேயர்.

மண்டல பத்ர கம்முடம் வர்ஷாபூ க்ரூர மற்றை
மிண்டிய வர்ஷ கேது விளங்குமூக் கிரட்டை யின்பேர்
கொண்டநீ லவர்ஷா பூவும் கொண்ணீலச் யாம க்ருஷ்ண
மண்டிய புனர்ந வர்வும் மருநீலச் சார ணைக்காம்.

(இ—ள்.) மண்டலபத்ரக:, வர்ஷாபூ, க்ரூர:, வர்ஷகேது: இவை மூக்கிரட்டையின் பெயர்கள். நீலவர்ஷாபூ, நீலபுநர்நவா, ச்யாமபுநர்நவா, க்ருஷ்ணபுநர்நவா, இவை நீலச்சாரணையின் பெயர்கள். (141)

### மருதாணி, செங்குறிஞ்சி, மஞ்சட்குறிஞ்சி இவைகளின் பேயர்.

சகசரம் ஸைரே யந்தான் ஸஹாசரத் தோடு மற்றைத்
தகுஸைரே யகமு மல்கும் தழைமரு தோன்றி யின்பேர்
நகமுறுங் குரவ கப்பேர் நாறுசெங் குறிஞ்சிக் காகும்
சகமுறு குரண்ட கம்மஞ் சட்குறிஞ் சிக்கே சாற்றும்.

(இ—ள்.) ஸஹசர:, ஸைரேய:, ஸஹாசர:, ஸைரேயக: இவை மருதாணியின் பெயர்கள். குரவக: என்பதுசெங் குறிஞ்சியையும்; குரண்டக: என்பது மஞ்சட் குறிஞ்சியையும் குறிக்கும் (142)

### சிற்றமுட்டியின் பெயர்.

சமங்காவோ தனிகா பத்ரௌ தனீவாடீ பலாவு மாகும
கமங்கா யஷ்டி காவும் கழறிடு மஹாஸ மங்கா
இமங்குவி சீத பாகீ யெழிலோத நாஹ்வா யாவும்
அமைவுறுஞ் சிற்ற முட்டி யபிதான மென்ப மேலோர்.

(இ—ள்.) ஸமங்கா, ஓதநிகா, பத்ரௌதநீ, வாடீ, பலா, காயஷ்டிகா, மஹாஸமங்கா, சீதபாகீ, ஓதநாஹ்வா இவை சிற்றமுட்டியின் பெயர்கள். (143)

### பேராமுட்டியின் பெயர்.

மகாபலா வர்ஷ புஷ்பீ வாட்பாய னீயு மற்றை
உகாவளர் ப்ருஹத்ப லாவு முயர்தேவ ஸஹாவே தானும்
விகாசமார் ஸஹதே வாவும் விளங்கிடும் பீத புஷ்பீ
விகாதமில் பேரா முட்டி விரும்பிய நாம மாகும்.

(இ—ள்.) மஹாபலா, வர்ஷபுஷ்பீ, வாட்யாயநீ, ப்ருஹத்பலா, தேவஸஹா, ஸஹதேவா, பீதபுஷ்பீ இவை பேராமுட்டியின் பெயர்கள். (144)

### நாகபலாவின் பெயர்.

காகந்தி ணிகாவே ஹ்ருஸ்வ கவேதுகா விச்வ தேவா
விரவுகாங் கேருகீயும் விளங்குறு மரிஷ்டா மற்றைப்
பரவுகண் டாவி னேடும் பகர்நாக பலாவு மெல்லாம்
விரகறி நூலோர் கூறும் வியனாக பலாவின் பேரே.

(இ—ள்.) காகந்திநிகா, ஹ்ருஸ்வகவேதுகா, விச்வ தேவா, காங்கேருகீ, அரிஷ்டா, கண்டா, நாகபலா இவை நாகபலாவின் பெயர்கள். (145)

### அதிபலாவின் பெயர்

அதிபலா வாட்ய புஷ்பீ யவிர்கங்க தாவி ருஷ்யா
மதியுறு வ்ருஷ்ய கந்தா மகிழ்பூரி பலாவு மற்றைத்
துதிபெறு பலிகா தானுந் துலங்குநல் லதிப லாப்பேர் [காம்
அதிபலாச் சிறுதுத் திக்காம் அணிநாகம் பெருந்துத் திக்

(இ—ள்.) அதிபலா, வாட்யபுஷ்பீ, கங்கதா, வ்ருஷ்யா, வ்ருஷ்யகந்தா, பூரிபலா, பலிகா இவை அதிபலாவின் பெயர்கள். அதிபலா வென்பது சிறுதுத்தியும், நாகபலா வென்பது பெருந்துத்தியுமாம். (146)

### முதியார்கூந்தலின் பெயர்.

ஸரணீயே ஸாரணீயும் சாருபார் ணீயும் பின்னும்
அரணமார் பத்ர பார்ணீ யணிஸூப்ர ஸராவு மற்றை
முரணுறும் ப்ரஸார ணீயே முகிழ்ராஜ பலாவுந் தானும்
சாணுறு ப்ரதானி காவும் சாற்றிடு முதியார் கூந்தல்.

(இ—ள்.) ஸரணீ, ஸாரணீ, சாருபார்ணீ, பத்ரபார்ணீ, ஸூப்ரஸரா, ப்ரஸாரணீ, ராஜபலா, ப்ரதாநிகா இவை முதியார் கூந்தலின் பெயர்கள். (147)

### தண்ணீர்விட்டான் கிழங்கின் பெயர்.

இந்தீவரீ பீவ ரீயு மியம்புநல் ருஷ்யப் ரோக்தா
சந்தமார் சதாவ ரீயும் சதபதீ த்வீபி காவும்
உந்துநீர் த்வீபி சத்ரு வூர்த்வகண் டகாவு மற்றை
முந்திய வரீயுந் தண்ணீர் விட்டான்றன் கிழங்கென் றோதும்.

(இ—ள்.) இந்தீவரீ, பீவரீ, ருஷ்யப்ரோக்தா, சதா வரீ, சதபதீ, த்வீபிகா, த்வீபிசத்ரு:, ஊர்த்வகண்டகா, வரீ இவைதண்ணீர் விட்டான் கிழங்கின் பெயர்கள். (148)

### பெருந் தண்ணீர்விட்டான் கிழங்கின் பெயர்.

இரங்கிணீ சதாவ ரீயு மியஊர்த்வ கண்டி காவும்
உரங்கிளர் சகஸ்ர வீர்யா உறுபகு பத்ரி காவும்
தரங்கமார் பீரு தானுந் தருமஹா புருஷ தந்தா [ன்ப.
பெருந்தண்ணீர் விட்டான் கந்தம் பிறங்கிடும் பெயரா மெ

(இ—ள்.) ரங்கிணீ, சதாவரீ, ஊர்த்வகண்டிகா, ஸஹ ஸ்ரவீர்யா, பகுபத்ரிகா, பீரு, மஹாபுருஷதந்தா இவைபெ ருந்தண்ணீர் விட்டான் கிழங்கின் பெயர்கள். (149)

### ஆமணக்கின் பெயர்.

சித்திரந் தருணஞ் சுக்லம் தீர்க்கதண் டமுமே ரண்டம்
தத்துறு வர்த்த மானம் தழுவுமா மண்டம் மற்றைக்
கொத்துபஞ் சாங்கு லப்பேர் குலவுகந் தர்வ ஹஸ்தம்
சித்திர நூலோர் கூறுஞ் திகழ்சிற்று மணக்கின் பேரே.

(இ—ள்.) சித்ர:, தருண:, சுக்ல:, தீர்க்கதண்ட:, ஏர ண்ட:, வர்த்தமாந:, ஆமண்ட:, பஞ்சாங்குல:, கந்தர்வஹ ஸ்த: இவை சிற்றுமணக்கின் பெயர்கள். (150)

### ரக்தஏரண்டத்தின் பெயர்.

சஞ்சுக மஸ்தி கர்ணந் தரும்வ்யாக்ர தளமுவ காட்டும்
துஞ்சிலர் ருபுகம் வ்யாக்ரம் சொல்ருபு ஹஸ்தி கர்ணீ
விஞ்சுமுத் தான பத்ர கத்தொடு விளங்கு நாமம்
எஞ்சலில் நூலே ரக்த வேரண்ட மென்றே சாற்றும்.

(இ—ள்.) சஞ்சுக:, ஹஸ்திகர்ண:,வ்யாக்ரதள:,ருபுக:, வ்யாக்ர: ருபு:, ஹஸ்திகர்ணீ, உத்தாநபத்ரக: இவை சிவப்பு ஆமணக்கின் பெயர்கள். (151)

**பேராமணக்கு, மறிகுடரி இவைகளின் பெயர்.**

தூலவே ரண்டத் தோடு துன்மஹே ரண்டந் தானும்
ஏலுறு மஹாபஞ் சாங்கு லம்போரா மணக்கென் றேற்கும்
கோலுமே ஷாந்தி ரீபஸ்த் தாந்திரீ வ்ருஷமே தாவும்
மால்சாக லாந்தி ரீகா மறிகுட ரிக்கே யாகும்.

(இ—ள்.) ஸ்தூலஏரண்ட:, மஹேரண்ட:, மஹாபஞ்சாங்குல: இவைபேராமணக்கின் பெயர்கள்; மேஷாந்த்ரீ, பஸ்தாந்த்ரீ, வ்ருஷமேதா, சாகலாந்த்ரீ இவை மறிகுடரியின் பெயர்கள். (152)

முதல் வர்க்கம்,
முற்றிற்று.

நிகண்டு ரத்நாகரம்

# இரண்டாவது வர்க்கம்.

---

### சதகுப்பையின் பேயர்.

சதபுஷ்பா மிசியே கோஷா சதாஹ்வாவே கார வீயும்
இதமுறு மதிச்சத் ராவு மியலவாக் புஷ்பீ தானும்
அதமறும் பீதி காவும் அளவில்மா தவிசி பாவும்
விதமுறு சதகுப் பைக்கே விளம்பிய பெயரா கும்மே.

(இ—ள்.) சதபுஷ்பா, மிசி:, கோஷா, சதாஹ்வா, காரவீ, அதிச்சத்ரா, அவாக்புஷ்பீ, பீதிகா, மாதவீ, சிபா இவை சதகுப்பையின் பெயர்கள். (1)

### காட்டுச்சதகுப்பையின் பேயர்.

மிசிரேயா தால பர்ணீ மிசியொடு தால பத்ரீ
ஒசிவரு சாலே யந்தான் உயர்சீத சிவமு மற்றைக்
கசிவுறு ரக்த தோஷம் கழித்திடு சாலீ னம்மே
குசமுறு காடு சார்ந்த குறிசத குப்பை யின்பேர்.

(இ—ள்.) மிச்ரேயா, தாலபர்ணீ, மிசி:, தாலபத்ரீ, சாலேயம், சீதசிவ:, சாலீந: இவை காட்டுச் சதகுப்பையின் பெயர்கள். (2)

### வசம்பு, வேள்வசம்பு இவைகளின் பேயர்.

உக்கிர ஜடிலா வோடு முயர்வசா லோம சாவும்
உக்கிர கந்தா கோலோ மீயிவை வசம்பென் றோதும்
தக்கஷட் க்ரந்தா ச்வேத வசாவொடு சாற்று மேத்யா
மிக்கஹை மவதீ தானு விளங்குவெள் வசம்பின் பேராம்.

(இ—ள்.) உக்ரஜடிலா, வசா, லோமசா, உக்ரகந்தா, கோலோமீ இவைவசம்பின் பெயர்கள்; ஷட்க்ரந்தா, ச்வேதவசா, மேத்யா, ஹைமவதீ இவை வெள்வசம்பின்பெயர்கள். (3)

**கோட்டைக்கரந்தை, காக்கைக் கோல்லி இவைகளின் பெயர்.**

விச்சிர கந்தா விச்ரா விரியதி கந்தி காவும்
துச்சமில் விபுஷா வோடு துலங்கிய ஹபுஷா வென்ப
மெச்சுகொட் டைக்க ரந்தை விரித்வாங்க்ஷ நாசி னீயும்
கச்சுக்னீ யச்சு வத்த பலாவிவை காக்கைக் கொல்லீ.

(இ—ள்.) விச்ரகந்தா, விச்ரா, அதிகந்திகா, விபுஷா, ஹபுஷா இவை கொட்டைக்கரந்தையின் பெயர்கள். த்வாங்க்ஷநாசிநீ, கச்சுக்நீ, அச்வத்தபலா இவை காக்கைக் கொல்லியின் பெயர்கள் (4)

**வாய்விடங்கத்தின் பெயர்.**

விடங்கமே ஜந்து ஹந்த்ரீ விளங்குதண் டுலீபு மற்றை
அடங்கலில் கைர லாவும் மோஹாவும் கிருமி ஹாவும்
முடங்குசித் ரதண்டு லாவும் நுவல்ம்ருக காமி னீயும்
உடங்கிய கிருமிக் னீயு முயரும்வாய் விடங்கத் தின்பேர்.

(இ—ள்.) விடங்க:, ஜந்து ஹந்த்ரீ, தண்டுலீ, கைரலா, அமோஹா, க்ருமிஹா, சித்ரதண்டுலா, ம்ருககாமிநீ, க்ருமிக்நீ இவைவாய்விடங்கத்தின் பெயர்கள். (5)

**வெட்பாலையின் பெயர்.**

குடஜம்வத் ஸகமே கௌடம் குளிர்கிரி மல்லி காவும்
தடமுறு கௌட ஜம்நற் றளிரிந்த்ர வ்ருக்ஷம் மற்றைத்
தொடர்மல்லி காபுஷ் பம்மே சொல்லிய வ்ருக்ஷ கந்தான்
அடரிலைக் கலிங்க மென்று மறைந்திடும் வெட்பா லைப்பேர்

(இ—ள்.) குடஜ:, வத்ஸக:, கௌட:, கிரிமல்லிகா, கௌடஜ:, இந்த்ரவ்ருக்ஷக:, மல்லிகாபுஷ்ப:, வ்ருக்ஷக:, கலிங்க: இவை வெட்பாலையின் பெயர்கள். (6)

### வெட்பாலையரிசியின் பெயர்.

கலிங்ககா சக்கி ராஹ்வா கஹ்வரம் வல்ல ஜந்தான்
துலங்குபத் ரயவா வோடு சொல்க்ருஷ்ண தண்டு லாவும்
இலங்குவத் ஸகபீ ஜம்மே எழிலிந்த்ர யவமும் பின்னும்
நலங்கிளர் வெட்பா லைக்கே நவின்றிடு மரிசி யின்பேர்.

(இ—ள்.) கலிங்ககா:, சக்ராஹ்வா, கஹ்வரம், வல்லஜம், பத்ரயவா, க்ருஷ்ணதண்டுலா, வத்ஸகபீஜ:, இந்த்ரயவா இவை வெட்பாலையரிசியின் பெயர்கள். (7)

### யவக்ஷாரத்தின் பெயர்.

யவக்ஷாரம் யவஜம் யவ்யம் யவசூகம் யவாஹ்வம் யாவும்
உவட்டாத பாக்கி யத்தோ டுயர்யாவ சூக ஜப்பேர்
கவட்டுறு யவாக்ர ஜந்தான் கருதுசூ கஜமும் மற்றைச்
சவட்டலில் யவக்ஷா ரத்தின் தழுவிய நாம மாமே.

(இ—ள்.) யவக்ஷார:, யவஜ:, யவ்ய:, யவசூக:, யவாஹ்வா, பாக்ய:, யாவசூகஜ:, யவாக்ரஜ:, சூகஜ: இவை யவக்ஷாரத்தின் பெயர்கள். (8)

### சர்ஜிக்ஷாரத்தின் பெயர்.

சுகவர்ச்சம் சுவர்ச்சத் தோடு சுவர்ச்சிகம் ஸர்ஜி காவே
தகுஸர்ஜி காக்ஷா ரம்மும் தாவிலாச் சுவர்ச்சி காவும்
மிகுபுகழ் ஸ்ர்ஜி க்ஷாரம் மேவிய நாம மென்று
வெகுகலை கற்று ணர்ந்தோர் வேண்டுவர் பாரின் மீதே.

(இ—ள்.) ஸ்ஜகவர்ச்ச:, ஸுவர்ச்ச:, ஸுவர்ச்சிக:, ஸர்ஜிகா, ஸர்ஜிகாக்ஷார:, ஸுவர்ச்சிகா இவை ஸர்ஜிக்ஷா ரத்தின் பெயர்கள். (9)

### வெங்காரத்தின் பெயர்.

டங்கணம் லோக சுத்தி காரகம் த்ராவி யோடு
டங்கண க்ஷார மற்றைத் தருதிரா வணக மாகும்
பொங்குமா லதிர ஸத்தின் சம்பவ மென்றும் போற்றும்
இங்கிவை வெங்கா ரத்துக் கேற்றிடு நாம மாமே.

(இ—ள்.) டங்கண:, லோஹசுத்திகாரக:, த்ராவீ, டங்கணக்ஷார:, த்ராவணக:, மால்திரஸஸம்பவ: இவைவெங்கா ரத்தின் பெயர்கள். (10)

### இந்துப்பின் பெயர்.

சிந்துஜம் சிவமே சிந்து சிந்தூத்தம் மணிமந் தம்மே
முந்துசி லாத்ம கம்பின் முயங்குநா தேய மற்றைச்
சிந்தவில் சுத்தம் சீத சிவத்தோடு சைந்த வந்தான்
நந்தலி லிந்துப் பிற்கே நவின்றநன் ஞம மாகும்.

(இ—ள்.) ஸிந்துஜம், சிவம், ஸிந்து, ஸிந்தூத்தம், மணிமந்தம், சிலாத்மகம், நாதேயம், சுத்தம், சீதசிவம், ஸைந்தவம் இவை இந்துப்பின் பெயர்கள். (11)

### வளையலுப்பின் பெயர்.

பிடந்திரா வணம்க்ஷா ரம்மே பெருகுக்ருத் ரிமக மென்ப
மடங்கிய தூர்த்தங் கண்ட லவணமா சரமு மற்றைத் [வும்
தொடர்ந்திடுஞ் சுபாக்கி யம்பின் தொடுக்ருத கம்மும் யா
இடந்தரு நூலோர் கூறும் எழில்வளை யலுப்பின் பேரே.

(இ—ள்.) பிடம், த்ராவணம், க்ஷாரம், க்ருத்ரிமகம், தூர்த்தம், கண்டலவணம், ஆஸுரம், ஸுபாக்யம், க்ருதகம் இவை வளையலுப்பின் பெயர்கள். (12)

### கரியுப்பின் பெயர்.

திலகம்சௌ வர்ச்ச லந்தான் திகழ்கால லவணம் பின்னும்
உலவிய ருசகம் ஹ்ருத்ய கந்தக முணர்த்து மக்ஷம்
நிலவுக்ருஷ் ணலவ ணம்மும் நிகழுமிந் நாமம் யாவும்
குலவிய கரியுப் பிற்கே கூறுவர் தேறு நூலோர்.

(இ—ள்.) திலகம், ஸௌவர்ச்சலம், காலலவணம், ருசகம், ஹ்ருத்யகந்தகம், அக்ஷம், க்ருஷ்ணலவணம் இவை கரியுப்பின் பெயர்கள். (13)

### சவுட்டுப்பின் பெயர்.

ரோமகம் வஸுக மௌர்வம் ருசியுறு முக்ர மாகும்
தோமறு மௌத்பி தம்பாம் சுலவண மென்று மோதும்
வாமஞ்சார் வகுணம் பின்னும் வசுவென வழுத்தும் யாவும்
சேமமார் சவுட்டுப் பிற்கே செப்பிடும் நாம மாமே.

(இ—ள்.) ரோமகம் வஸுகம், ஔர்வம், உக்ரம், ஔத்பிதம், பாம்சுலவணம், ஸார்வகுணம், வஸு இவை சவுட்டுப்பின் பெயர்கள். (14)

### சமுத்திரவுப்பின் பெயர்.

சிசிரமே ஸமுத்ர ஜந்தான் திகழ்ஸாக ரஜமும் பின்னும்
பகர்*லவ ணோத தீஸம் பவம் க்ஷாரந் தானு மென்ப
நிகழ்சமுத் ரலவ ணம்மே நிறைகட லுப்பின் பேராம்
இகழ்விலிந் நாம மன்றி யிபும்பிடும் பேத மின்னும்.

---

*லவணோததீ—நீட்டல்.

(இ—ள்.) சிசிரம், ஸமுத்ரஜம், ஸாகரஜம், லவணோத திஸம்பவம், க்ஷாரம், ஸமுத்ரலவணம் இவை கடலுப்பின் பெயர்கள். (15)

### லவணபேதம்.

வஜ்ரகம் ஸர்வ க்ஷாரம் வளர்லவ ணாக ரம்மும்
மெச்சிய நீலி காசோத் பவங்காடம் ஔஷ்க ரம்மாம்
துச்சமில் த்ரௌணே யந்தான் சொல்லுமிந் நாமமெல்லாம்
வச்சிடு லவண பேத வகைராஜ நிகண்டிற் கூறும்.

(இ—ள்.) வஜ்ரகம், ஸர்வக்ஷாரம், லவணாகரம், நீலி காசோத்பவம், காடம், ஔஷ்கரம், த்ரௌணேயம் முத லிய பல உப்புவர்க்கங்களை ராஜ நிகண்டு கூறும். (16)

### பெருங் காயத்தின் பெயர்

ஹிங்குரா மடமத் யுக்ர மிருஞ்சுப தூப னந்தான்
பொங்குஜந் துக்ன மோடு பூதநா சனமு மாகும்
மங்கிடா பாஹ்லீக மருவிய வகூட கந்தம்
துங்கமார் ஜரணந் தானுஞ் சொல்பெருங் காயத்தின் பேர்.

(இ—ள்,) ஹிங்கு, ராமடம், அத்யுக்ரம், ஸூபதூப நம், ஜந்துக்நம் பூதநாசநம், பாஹ்லீகம், அகூடகந்தம், ஜரணம் இவை பெருங்காயத்தின் பெயர்கள். (17)

### ஹிங்குபத்திரியின் பெயர்.

காருபத் திரிகா தன்வி சாற்றிடு பாஷ்பி காவும்
நேரும்பில் விகாவே ஹிங்கு பத்திரீ கபரீ யாகும்
தீர்வில்ப்ருத் வீகா வோடு தீர்க்கிகா பிருது லாவும்
சேருநற்ப் ருதுவு மின்ன திகழிங்கு பத்தி ரிப்பேர்.

(இ—ள்.) தார்ருபத்ரிகா, தந்வீ, பார்ஷ்பிகா, பில்விகா, ஹிங்குபத்ரீ, கபரீ, ப்ருத்வீகா, தீர்க்கிகா, ப்ருதுலா, ப்ருது இவை ஹிங்கு பத்திரியின் பெயர்கள். (18)

### பால் பெருங்காயத்தின் பெயர்.

வேணுபத்ரீப லாசா விளங்குபிண் டஹிங்கு வாகும்
சோர்ணவில் வம்ச பத்ரீ குலவிய ஜந்து காவும்
மாணுறு நாட ஹிங்கு மருவுநற் சிவாடி காவும்
பேணிய நாட ஹிங்கு பெறும்பெயர் பால்கா யப்பேர்.

(இ—ள்.) வேணுபத்ரீ, பலாசா, பிண்டஹிங்கு, வம்சபத்ரீ, ஜந்துகா, நாடஹிங்கு, சிவாடிகா இவை பால்காயத்தின் பெயர்கள். (19)

### தும்புருவின் பெயர்.

தும்புரு ஸௌர பந்தான் திவிஜமே தீக்ஷ்ண வல்கம்
வம்புறு தீக்ஷ்ண பத்ரம் வருதீக்ஷ்ண பலமும் ஸௌரம்
நம்புநல் லனுஜம் மற்றும் நவில்மஹா முனியு நாட்டும்
இம்பரில் நல்லோ ரேத்தும் இகழ்வில்தும் புருவின் பேராம்.

(இ—ள்.) தும்புரு:, ஸௌரப:, த்விஜ:, தீக்ஷ்ணவல்க:, தீக்ஷ்ணபத்ர:, தீக்ஷ்ணபல:, ஸௌர:, அநுஜ:, மஹாமுநி: இவை தும்புருவின் பெயர்கள். (20)

### சிற்றேலத்தின் பெயர்.

சந்திர பாலா வேலா தகுதுத்தா கபோத வர்ணு
சுந்தரத் ராவி டீயுஞ் சூக்ஷ்மமாந் த்ருடியு மற்றை
அந்தமார் கோரங் கீபு மரும்பகு லாவி னோடும்
பிந்திய நிஷ்கு டீயும் பிறங்குசிற் றேலத் தின்பேர்.

(இ—ள்.) சந்த்ரபாலா, ஏலா, துத்தா, கபோதவர்ணு, த்ராவிட,த்ருடி:, கோரங்கி, பஹுலா, நிஷ்குட இவை சிற்றேலத்தின் பெயர்கள். (21)

### பேரேலத்தின் பெயர்.

திரிபுடா ஸ்தூலை லாவும் திரிபுடோத் பவாபு டாவும்
மருவுத்வக் ஸுகந்தா வேோடு வளர்ப்ருஹ தேலா வாகும்
பொருவில்ப்ருத் வீகா பத்ரை லாவொடு கன்ய காவும்
குரவர்கள் மகிழ்ந்து நாளும் கூறுபே ரேலத் தின்பேர்.

(இ—ள்.) த்ரிபுடா, ஸ்தூலலா, த்ரிபுடோத்பவா, புடா,த்வக்ஸுகந்தா,ப்ருஹதேலா, ப்ருத்வீகா,பத்ரைலா, கன்யகா இவை பேரேலத்தின் பெயர்கள். (22)

### சிறுநாகப்பூவின் பெயர்.

நாகமே நாக புஷ்பம் நாககே சரம் சாம்பேயம்
நாககிஞ் சல்கம் ஹேமம் நாறுகாஞ் சனமு மற்றைச்
சோகமில் கனகம் பின்னும் சொல்லுகே சரமு மென்ப
வேகமார் சிறுநா கப்பூ விளங்கிடு நாம மாமே.

(இ—ள்.) நாகம், நாகபுஷ்பம், நாககேஸரம், சாம்பேயம், நாககிஞ்ஜல்கம், ஹேமம், காஞ்சநம், கநகம், கேஸரம் இவை சிறுநாகப்பூவின் பெயர்கள். (23)

### லவங்கப்பட்டையின் பெயர்.

அவசமே வராங்கம் ப்ருங்கம் த்வக்சோசம் சகலம் தானும்
கவசமார் சைஹ லந்தான் கருதிய லாட பர்ணம்
தவமுறு முகசோத் யம்மே தழுவுமுத் கடமும் மற்றைக்
கவர்வனப் பிரியந் தானும் கழறிடும் லவ கப் பட்டை.

(இ—ள்.) த்வசம், வரா்ங்கம், ப்ருங்கம், த்வக்சோசம், சகலம், ஸைஹலம், லாடபர்ணம், முகசோதயம், உத்கடம், வரப்ரியம் இவை லவங்கப்பட்டையின் பெயர்கள்.

## தமாலபத்திரத்தின் பெயர்.

வாசங்கோ பனமி ராமம் வஸ்திரம் தமால பத்ரம்
நேசமார் பலாசம் பத்ரம் நிகழுந் தா பஸஜ மற்றை
வீசுறு சதன மம்சு கந்தளம் விளம்பு நாமம்
ஏசறு தமால பத்ர மென்பபச் சிலையு மப்பேர்.

(இ—ள்.) வாஸ:, கோபநம் ராமம், வஸ்த்ரம், தமால பத்ரம், பலாசம், பத்ரம், தாபஸஜம், சதநம், அம்சுகம், தளம் இவை பச்சிலையின் பெயர்கள். (25)

## தாளீசபத்திரியின் பெயர்.

நீலமா மலகீ பத்ரம் நிகழ்ஸங்கோ தாந்தா ளீசம்
மேலுறு பத்தி ராட்யம் விளங்குதா ளீச கந்தான்
ஏலுந்தா ளீச பத்ர கத்தொடு மியலு நாமம்
நூலவர் மகிழ்ந்து நாளும் நுவல்தாளீ சபத்திரி யாகும்.

(இ—ள்.) நீலம், ஆமலகீபத்ரம், ஸங்கோதரம், தாளீஸம், புத்ராட்யம், தாளீஸகம், தாளீஸபத்ரகம் இவை தாளீசபத்திரியின் பெயர்கள். (26)

## மூங்கிலுப்பின் பெயர்.

துங்கக்ஷீரிதுகா சுப்ரா த்வக்க்ஷீரி வம்ச ஜாவும்
பொங்குநல் வம்ச க்ஷீரி ய்வஸம்ப வாவும் பின்னும்
துங்கமார் வாம்சி வம்ச்யா சுபாவம்ச ரோச னவும்
தங்கிய யவஜா வைண வீவேயுப் பென்றே சாற்றும்.

(இ—ள்.) துங்கக்ஷீரீ, துகா, சுப்ரா, த்வக்க்ஷீரீ, வம்சஜா, வம்சக்ஷீரீ, யவஸம்பவா, வாம்சீ, வம்ச்யா, சுபா, வம்சரோசநா, யவஜா, வைணவீ இவை மூங்கிலுப்பின் பெயர்கள். (27)

### பெருஞ்சீரகத்தின் பெயர்.

உபகுஞ்சா கா்லி காவும் உபகாலி காவே குஞ்சீ
உபகுஞ்சீ ப்ருத்வீ காவும் உயரிய சுஷவீ தானும்
தபமறு குஞ்சி காவே தகும்ஸ்தூல ஜீர கம்மும்
நிபமறும் பெரிய சீர கத்தினை நிகழ்த்து நாமம்.

(இ—ள்.) உபகுஞ்சா, காலிகா, உபகாலிகா, குஞ்சீ, உபகுஞ்சீ, ப்ருத்வீகா, ஸுஷவீ, குஞ்சிகா, ஸ்தூலஜீரக: இவை பெருஞ்சீரகத்தின் பெயர்கள். (28)

### மாதுளம்பழத்தின் பெயர்.

தாடிமங் கரகத் தோடு தாடிமீ சார மாகும்
தேடிய ரக்த பீஜம் திகழ்சுக வல்ல பந்தான்
கோடுறு குட்டி மம்பின் குறிபல சாட வப்பேர்
பீடுறு குசப லம்மும் பெருகுமா் துளையின் பேரே.

(இ—ள்.) தாடிம:, கரக:, தாடிமீஸார:, ரக்தபீஜ:, சுகவல்லப:, குட்டிம:, பலசாடவ:, குசபல: இவை மாதுளம் பழத்தின் பெயர்கள். (29)

### கோத்துமல்லியின் பெயர்.

தான்யகம் சால்ல காவும் தானேயம் விதுன்ன கந்தான்
தான்யகா் சத்ர தான்யம் தனிகுஸ்தும் புருவு மாகும்
தான்யாவே தா்னீ யோடு தக்கவிப் பெயர்கள் யாவும்
ஊனமில் கொத்து மல்லி யுறுபெய ராகு மென்ப.

(இ—ள்.) தாந்யகம், சால்லகா, தாநேயம், விதுந்நகம், தாந்யகா, சத்ரதாந்யம், குஸ்தும்புரு:, தாந்யா, தாநீ இவை கொத்து மல்லியின் பெயர்கள். (30)

### சீரகத்தின் பெயர்.

சீரகந் தீர்க்க கந்தான் தீப்பியம் வருணம் மற்றை
நேருறு ஹ்ருத்யம் பூஜ்ய மானகம் நிகழும் ருச்யம்
தீர்வறு பீதா பம்மே சேருமா கதம ஜாஜீ
ஏருறு மனோஜ்ஞந் தானும் எழில்சீர கத்தின் பேராம்.

(இ—ள்.) ஜீரகம், தீர்க்ககம், தீப்யம் வருணம், ஹ்ருத்யம், பூஜ்யமாநகம், ருச்யம், பீதாபம், மாகதம், அஜாஜீ, மநோஜ்ஞம் இவை சீரகத்தின் பெயர்கள். (31)

### வெண்சீரகத்தின் பெயர்.

சுக்கில வஜாஜி யோடு சொல்லுதீர்க் ககணு வாகும்
தக்கதீர்க் ககங்க ணுவே சாற்றுதீர்க் கசீர கம்மும்
மிக்ககௌ ரஜீர கந்தீ பனமுறு ஸ்தன்யந் தானும்
இக்கண ஜீர கத்தோ டேத்துவெண் சீர கப்பேர்.

(இ—ள்.) சுக்லஅஜாஜீ, தீர்க்ககணு, தீர்க்கக:, கணு, தீர்க்கஜீரகம், கௌரஜீரகம், ஸ்தந்ய:, கணஜீரக: இவை வெண்சீரகத்தின் பெயர்கள். (32)

### கருஞ்சீரகத்தின் பெயர்.

சுகந்தம்வர் ஷாவி னோடு சொல்லிய ஜரணு காலி
முகந்தகாச் மீர ஜீர காகண ஜீர கந்தான்
உகந்தநல் க்ருஷ்ண ஜாஜீ யுரைகால பேசி காவும்
இகந்தொழி யாது கொள்ளு மியல்கருஞ் சீர கப்பேர்.

(இ—ள்.) ஸுகந்த:, வர்ஷா, ஜரணு, காலி:, காச்மீர ஜீரகா, கணஜீரக:, க்ருஷ்ணுஜாஜீ, காலபேசிகா இவை கருஞ்சீரகத்தின் பெயர்கள். (33)

### காட்டுச்சீரகத்தின் பெயர்.

அருமையார் கணுவி னேடு மணிப்ருஹத் பார்லி தானும்
திருவமார் சூக்ஷ்ம பத்ரா சொல்வன ஜீர கந்தான்
கருமேகஞ் சொறிசி ரங்கு கழித்து நற் குணமேகாட்டும்
பெருமைசேர் காட்டுச் சீர கத்தாறு பெயர்க டாமே.

(இ—ள்.) கணு, ப்ருஹத்பார்லீ சூக்ஷ்மபத்ரா, வந ஜீரகம் இவை காட்டுச் சீரகத்தின் பெயர்கள். (34)

### அரிசித்திப்பிலியின் பெயர்.

பிப்பலீ மாக தியும் பிறங்குதீக்ஷ் ணதண்டு லாவும்
ஒப்பிலா வூஷ ணுவு முபகுல்யா கோலாச் யாமா
செப்புநற் கணுகி ருஷ்ணு சேர்சப லாசௌ வுண்டீ
திப்பிலி முன்னே சேருந் திகழரி சிப்பே ராமே.

(இ—ள்.) பிப்பலீ, மாகதீ, தீக்ஷ்ணதண்டுலா, ஊஷணு உபகுல்யா, கோலா, ச்யாமா, கணு, க்ருஷ்ணு, சபலா, சௌண்டீ இவை அரிசித்திப்பிலியின் பெயர்கள் (35)

### திப்பிலிமூலத்தின் பெயர்.

மூலங்க்ரந் திகமே கோல மூலம்பிப் பலீமூ லம்மே
ஏலுறுங் கடுகி ரந்தி யெழில்சவி காசி ரந்தான்
கோலுமூ ஷணமும் சர்வ க்ரந்திக மென்றுங் கொள்ளும்
சாலுந்திப் பிலிமூ லத்தின் சாற்றுநற் பெயர்க டாமே.

(இ—ள்.) மூலம், க்ரந்திகம், கோலமூலம், பிப்பலீ மூலம், கடுக்ரந்தி, சவிகாசிரம், ஊஷணம், ஸர்வக்ரந்திகம் இவை திப்பிலி மூலத்தின் பெயர்கள் (36)

### திப்பிலிமூலத்தின் பெயர், செவியத்தின் பெயர்.

விண்டமுற் பெயர்க ளன்றி விளங்குநல் மோடி யென்றும்
கண்டதிப் பிலிதா னென்றும் கழறுவ ரதற்கே நாமம்
கொண்டநற் சவிகா சவ்யம் கோலவல் லீயி னோடும்
மண்டிய சவிகந் தானும் வருசெவி யத்தின் பேராம்.

(இ—ள்.) திப்பிலிமூலத்திற்கு முற்கூறிய பெயர்க ளன்றி மோடியென்றும், கண்டதிப்பிலி என்றும் கூறுவர்; சவிகா, சவ்யம், கோலவல்லீ, சவிகம் இவை செவியத்தின் பெயர்கள். (37)

### ஆனைத்திப்பிலியின் பெயர்.

கரிகணு விபக ணுவும் கஜக்ருஷ் ணு ச்ரேய ஸீயும்
எரிகஜ பிப்ப லீயே யியல்த்வீப பிப்ப லீயும்
திரிபுறும் சைம்ஹ லீயும் திகழ்வன பிப்ப லீயும்
நெருங்குமஸ் திமக தாவும் நேரானைத் திப்ப லீயாம்.

(இ—ள்.) கரிகணு, இபகணு, கஜக்ருஷ்ணு, ஸ்ரேயஸீ, கஜபிப்பலீ, த்வீபபிப்பலீ, சைம்ஹலீ, வநபிப்பலீ, ஹஸ்திமகதா இவை ஆனைத்திப்பிலியின் பெயர்கள். (38)

### கொடிவேலியின் பெயர்.

சித்ரகந் தகனம் வ்யாளம் சிகியொடு பாலீ பாடீ
ஒத்தநல் வல்ல ரீயே யுயர்வன்னி கடுவே யாகும்
தத்துபா டினம்ஜோ திஷ்கம் தாருண மக்னி கந்தான்
பத்திரக் கொடிவே லிக்கே பகருநற் பெயர்க ளாகும்.

(இ—ள்.) சித்ரக:, தஹந:, வ்யாள:, சிகீ, பாலீ, பாடீ, வல்லரீ, வஹ்நி:, கடு:, பாடிந:, ஜோதிஷ்க:, தாருண:, அக்நிக: இவை கொடிவேலியின் பெயர்கள். (39)

### கருங் கோடிவேலியின் பெயர்.

கருதுக்ருஷ் ணாரு ணாவும் கனன்றிடு மனலந் த்வீபி
பெரிதுயர் சித்ர பானு பிறங்குபா வகப்பேர் தானும்
விரிதிரை ஞாலந் தன்னுள் விளங்கிடு மாயு ணாலோர்
உரிகருங் கொடிவே லிக்கே யுரைத்திடும் நாம மாகும்.

(இ—ள்.) க்ருஷ்ணாருண:, அநல:, த்வீபீ, சித்ர பாநு: பாவக: இவை கருங் கொடிவேலியின் பெயர் கள். (40)

### சுக்கின் பெயர்.

நாகரஞ் ச்ருங்க பேரம் நவில்விச்வௌ ஷதமே சுண்டீ
சோகைதீ ரார்த்ர கம்மும் துகளறு கடுபத் ரந்தான்
வேகமார் மஹௌஷ தம்பின் விச்வம்விச் வபேஷ ஜப்பேர்
தேகநா லுணர்ந்து கூறுந் தெரிசுக்கின் பெயர்க ளாமே.

(இ—ள்.) நாகரம், ச்ருங்கபேரம், விச்வௌஷதம், சுண்டி, ஆர்த்ரகம், கடுபத்ரம், மஹௌஷதம், விச்வம், விச்வபேஷஜம் இவை சுக்கின் பெயர்கள். (41)

### இஞ்சியின் பெயர்.

மூலஜம் சார்ங்கம் குன்ம மூலமார்த் ரகம்ம ஹீஜம்
சீலமா ரபாக சாகம் ச்ருங்கபே ரமுமே சேரும்
மேலதாம் ராகுச் சத்ரம் மிகுமுனி பூஹ்ற்வ யந்தான்
கோலுமார்த் ராக்யா வென்றுங் குலவிய வப்பேர் தானும்.

(இ—ள்) மூலஜம், சார்ங்கம், குல்ம மூலம், ஆர்த்ரகம, மஹீஜம், அபாகசாகம், ச்ருங்கபேரம், ராகுச்சத்ரம், முநி பூஷ்வயம், ஆர்த்ராக்யம்; (42)

### இதுவுமது

வரத்தொடு சைக தேஷ்டம் வருமனூ பஜமு மாகும்
திரத்துறு சச்சா கமுமுந் திகழ்ஸௌசா ககமு மப்பேர்
சிரத்துநோய் தீர்க்கு மார்த்ர சாகங்கந் தலமும் சேரும்
விருத்திசெய் யாபு ணூலோர் விரும்பிய இஞ்சி யாமே.

(இ—ள்.) வரம், சைசதேஷ்டம், அநூபஜம், சச்சாகம், ஸௌசாககம், ஆர்த்ரசாகம், கந்தலம் இவை இஞ்சியின் பெயர்கள். (43)

### மிளகின் பெயர்.

மரிசமே சிரோவி ருத்தம் மகிழ்யவ னேஷ்ட மற்றைப்
பரிசமார் க்ருஷ்ணம் ச்யாமம் பலிதங்கோ லகமு மாகும்
துரிசறும் வல்லீ ஜம்மே துகளறு மூஷணம் பின்
பரசுதர் மபத்த னம்மும் பன்னிரி யமிளகின்பேரே.

(இ—ள்.) மரிசம், சிரோவ்ருத்தம், யவநேஷ்டம், க்ருஷணம், ச்யாமம், பலிதம், கோலகம, வல்லீஜம், ஊஷணம், தூர்மபத்நம் இவை மிளகின் பெயர்கள். (44)

### வெண் மிளகின் பெயர்.

சுப்பிர மரிசமும் துகளில் சிக்ருஜம்
செப்பறு பெருமைசேர் சிக்ரு பீஜமும்
தப்பறு நூலவர் தரணியிற் சொலும்
ஒப்பறு வெண்மிள குரைக்கும் நாமமே.

(இ—ள்.) சுப்ரமரிசம், சிக்ருஜம், சிக்ருபீஜம் இவை வெண்மிளகின் பெயர்கள். (45)

### குரோசாணியோமத்தின் பெயர்.

உக்கிர கந்தா தீப்ய முயர்யவாக் ரஜமு மற்றைத்
தக்கதீ பகம்ய வானீ தழுவிய தீப னீயா
யுக்குறு யவானி கம்மும் புரியவ ஸாஹ்றவந் தானும்
இக்குரோ சாணி யோமத் தின்பெய ராகு மன்றே.

(இ—ள்.) உக்ரகந்தா, தீப்ய:, யவாக்ரஜ:, தீபக:, யவாநீ, தீபநீயா, யவாநிக:, யவஸாஹ்றவ: இவை குரோசாணியோமத்தின் பெயர்கள். (46)

### புளியின் பெயர்.

தித்திடீ கம்சா காம்லம் செறியம்ல விருக்ஷம் மற்றை
ரத்தபூ ரகம்வ்ரு க்ஷாம்லம் ரமணிய வம்ல சாகம்
மத்தமே தீர்க்கு மம்ல மஹீருக மருவும் யாவும்
உத்தமர் கூறும் நாலின் உயர்புளி யாகு மன்றே.

(இ—ள்.) தித்திடீகம், சாகாம்லம், அம்லவ்ருக்ஷ:, ரக்தபூரகம் வ்ருக்ஷாம்லம், அம்லசாக:, ஆம்லமஹீருஹ: இவை புளியின் பெயர்கள். (47)

### * புளிவஞ்சியின் பெயர்.

சதவேதீ வேத ஸாம்லந் தருமம்ல வேத ஸந்தான்
உத்முறு ரக்த ஸ்ராவீ யுயர்பீம ரஸாம்ல மாகும்
சுதமறு மம்லம் வீர வேதஸ மென்றுஞ் சொல்லும்
இதமுறு பேத கம்மும் இயம்புநற் புளிவஞ் சிப்பேர்.

---

*இதனையே கொறுக்காய்ப்புளியென்று போகர் நிகண்டு கூறும்.

(இ—ள்.) சதவேதீ, வேதஸாம்ல:, அம்லவேதஸ:, ரக்தஸ்ராவீ, பீம:,ரஸாம்ல:, அம்ல:, வீரவேதஸ:, பேதக: இவை புளிவஞ்சியின் பெயர்கள். (48)

### ஓமத்தின் பெயர்.

லோசமர்க் கடமே வல்லீ லோபமில் கார வீயும்
பேசுதீப் யகம்மோ தாவும் பெரும்பஸ்த மோதா மற்றைத்
தேசுறு கராஹ்வா ஹஸ்தி மயூரகா தெரிக்குமின்ன
ஆசறு மஜமோ தாவு மறையுநல் லோமத் தின்பேர்.

(இ—ள்.) லோசமர்க்கட:, வல்லீ, காரவீ, தீப்யக:, மோதா, பஸ்தமோதா, கராஹ்வா, ஹஸ்திமயூரகா, அஜமோதா இவை ஓமத்தின் பெயர்கள். (49)

### தைவேளையின் பெயர்.

பூதிம யூரி காவும் பொருந்துநற் கந்தா துங்கீ
சேதமில் கரபுஷ் பாவே திகழஜ கந்தா தானும்
கோதறு பஸ்த கந்தா குலவுறு விகந்தி காவும்
ஓதுகா ரவியே பர்ப்ப ராவுயர் தைவே ளைப்பேர்.

(இ—ள்.) பூதிமயூரிகா, கந்தா, துங்கீ, கரபுஷ்பா, அஜகந்தா, பஸ்தகந்தா, விகந்திகா, காரவீ, பர்ப்பரா இவை தைவேளையின் பெயர்கள். (50)

### விளாம்பழத்தின் பெயர்.

ததிபலஞ் சிரபா கீயும் ததித்தமே யகூஷ ஸஸ்யம்
உதிதமார் கபித்தங் க்ராஹீ உயர்கந்த பலாவு மற்றை
முதிர்சுவைக் கபிப்ப்ரி யந்தான் முழங்குமிந் நாமம் யாவும்
எதிரிலா விளாம்ப ழத்தி னியம்பிடு நாம மாமே.

(இ—ள்.) ததிபல:, சிரபாகீ, ததித்த:, அக்ஷஸஸ்ய:, கபித்த:, க்ராஹீ, கந்தபல:, கபிப்ரிய: இவை விளாம்பழத்தின் பெயர்கள். (51)

### கற்கண்டின் பெயர்.

சுப்பிரா ஸிதோப லாவும் சுவேதசர் க்கராஸி தாவும்
ஒப்பறு மஹிச் சத்ராவுமுயர் மத்ஸ்யண் டிகாவு மற்றைச்
செப்பரு மீனாண் டீயும் செறிஸிக தாவும் யாவும்
துப்புறுஞ் கற்கண் டிற்கே சொல்லிய நாம மாமே

(இ—ள்.) சுப்ரா, ஸிதோபலா, ச்வேதசர்க்கரா, ஸிதா, அஹிச்சத்ரா, மத்ஸ்யண்டிகா, மீனாண்டீ, ஸிகதா, இவை கற்கண்டின் பெயர்கள். (52)

### தேன்கற்கண்டின் பெயர்.

மதுபவா மாத வீயும் மதுசர்க்க ராவும் மற்றை
முதிர்சுவை யவாஸம் யாவம் முழங்குமா க்ஷிகமும் பின்னும்
மதிமத னோத்ப வம்மே மருவுமிப் பதங்கள் சேர்ந்தே
உதிதமார் சர்க்க ராவு முயர்தேன்கற் கண்டின் பேராம்.

(இ—ள்.) மதுபவா, மாதவீ, மதுசர்க்கரா, யவாஸ சர்க்கரா, யாவசர்க்கரா, மாக்ஷிகசர்க்கரா, மதநோத்பவசர்க்கரா இவை தேன்கற்கண்டின் பெயர்கள். (53)

### நவாசாரத்தின் பெயர்.

பெருகிய வஜ்ரக க்ஷாரம் பிந்திய
திருகறு சூலிகா லவணம் சேர்தரும்
உருநவ சாரமே யோது மிப்பெயர்
அருநவா சாரமென் றறைப லாகுமே.

(இ—ள்.) வஜ்ரகக்ஷாரம், சூலிகாலவணம், நவஸாரம் இவை நவாசாரத்தின் பெயர்கள்.

இரண்டாவது வர்க்கம் முற்றிற்று.

# மூன்ருவது வர்க்கம்.

### சந்தனத்தின் பேயர்.

சந்தனம் மஹார்ஹம் ச்வேத சந்தனம் மலய ஜம்மே
கந்தஸா ரங்கோசிர்ஷம் கருதுபத் ரஸ்ரீ யாகும்
செந்தில பர்ண கம்பின் சிறந்தவிப் பேர்கள் யாவும்
நந்தலில் சந்த னத்தின் நாமமென் றறைந்தார் நல்லோர்.

(இ—ள்.) சந்தநம், மஹார்ஹம், ச்வேதசந்தநம், மலயஜம், கந்தஸாரம், கோசிர்ஷம், பத்ரஸ்ரீ:, திலபர்ணகம் இவைகள் சந்தனத்தின் பெயர்கள். (1)

### செஞ் சந்தனத்தின் பேயர்.

தாமிர ஸாரம் க்ஷுத்ர சந்தனம் ரக்த ஸாரம்
எமுறும் லோஹி தம்மே இயலரி சந்த னந்தான்
கார்முறு நிர்திஷ் டம்பின் கருதுரக் தசந்த னம்மே
தோமறு நூலிற் கூறும் துன்னுரக் தசந்த னப்பேர்.

(இ—ள்.) தாம்ரஸாரம், க்ஷுத்ரசந்தநம், ரக்தஸாரம், லோஹிதம், ஹரிசந்தநம், நிர்திஷ்டம், ரக்தசந்தநம் இவை செஞ்சந்தனத்தின் பெயர்கள். (2)

### பீதசந்தனத்தின் பேயர்.

பிறங்குநற் பதங்கத் தோடு பெருகிய பீத காஷ்டம்
திறங்கொள்கா லீய கம்மும் தெரிகர்ரா யணைப்ரி யம்மும்
இறும்புறு மலயோத் தம்பின் னியலரி சந்த னந்தான்
பறம்பினு ளடர்ந்து தோன்றும் பகர்பீத சந்த னப்பேர்.

(இ—ள்.) பதங்கம், பீதகாஷ்டம், காலீயகம், நாராயணப்ரியம், மலயோத்தம், ஹரிசந்தநம் இவை பீதசந்தனத்தின் பெயர்கள். (3)

### வெண் சந்தனத்தின் பெயர்.

பீதசந் தனத்தைச் சொன்ஞோம் பின்வெண்சந் தன முரைப்
தீதறும் ச்வேத பர்ப்ப ரிகந்திகழ் நிர்க்கந் தந்தான் [பாம்
ஓதுபர்ப் பரோத்ப வத்தோ டுயர்பர்ப்ப ரிகமு மென்ப
கோதறு வெண்மை சேர்ந்த குலவுசந் தனப்பே ராமே.

(இ—ள்.) ச்வேதபர்பரிகம், நிர்கந்தம், பர்பரோத்பவம், பர்ப்பரிகம் இவை வெண்சந்தனத்தின் பெயர்கள்.(4)

### ஹரிசந்தனத்தின் பெயர்.

சந்திர சந்த னந்தான் தகுமரி சந்த னம்மே
நந்தன ஜம்சு ரார்ஹம் நவில்மஹா கந்தம் திவ்யம்
முந்தரி கந்தம் மற்றை முருகுறு திவிஜம் பின்னும்
வந்திடு லோஹி தம்மே வளரரி சந்த னப்பேர்.

(இ—ள்.) சந்த்ரசந்தநம், ஹரிசந்தநம், நந்தநஜம், ஸுரார்ஹம், மஹாகந்தம், திவ்யம், ஹரிகந்தம், திவிஜம், லோஹிதம் இவை ஹரிசந்தனத்தின் பெயர்கள். (5)

### குங்குமப்பூவின் பெயர்.

சாருபாஹ் லீகம ஸ்ரம் சங்கோச மஸ்ருக் ரக்தம்
நேருங்காச் மீரம் பின்னும் நிகழ்வரங் குங்கு மந்தான்
பேர்பெறும் பிசுனத் தோடு பீதகம் ருதிர மாகும்
தேர்ந்திடு நாமம் யாவும் திகழ்குங்கு மப்பூ விற்காம்.

(இ—ள்.) சாரு, பாஹ்லீகம், அஸ்ரம், ஸங்கோசம், அஸ்ருக், ரக்தம், காச்மீரம், வரம்,குங்குமம், பிசுநம், பீதகம், ருதிரம் இவை குங்குமப்பூவின் பெயர்கள். (6)

## விலாமிச்ச வேரின் பெயர்.

